தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு

முற்றம்

₹10/- மலர் 16 இதழ் 02 ஜூன் 2014 | மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ் | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

பல்நோக்கு பயிற்சி (ம)உற்பத்திமையம் 6
பெண்களின் முன்னேற்றத்திற்காக வங்கிகள்... 12
வாழ்வாதாரத்தை வளமாக்கும் வங்கி சேவைகள்...! 24

திருமதி மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

சுய உதவிக் குழு இயக்கம் இன்று மிகப் பெரிய அளவில் வளர்ச்சி அடைந்துள்ளது. பல்வேறு சாதனைகளைப் படைத்து வரும் நீங்கள் சமுதாயத்தில் தவிர்க்க முடியாத சக்தியாக உருவெடுத்துள்ளீர்கள். மாதந்தோறும் முற்றம் இதழ் வாயிலாக உங்களைச் சந்தித்து, சில கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின் கீழ் இன்று தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமும், புதுவாழ்வு திட்டமும் பல்வேறு ஆக்கப்பூர்வமான செயல்களில் ஈடுபட்டு வருகின்றன. கிராமப்புறங்களில் உள்ள ஏழைக் குடும்பங்களின் வாழ்வில் வளமான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் தற்போது நம் மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது என்பதை அனைவரும் அறிவார்கள்.

மகளிரை குழுவாய் ஒருங்கிணைத்து, பயிற்சிகள் பல தந்து தொழில் வாய்ப்புகளை உருவாக்கி, அவர்களின் தன்னம்பிக்கைக்கு ஊக்கம் அளித்து வருவது நம் மகளிர் திட்டம் தான். இத்திட்டத்தின் வெற்றிக்கு நீங்கள் தான் காரணம். உங்களின் ஒருமித்த ஒற்றுமை உணர்வும், அயராத உழைப்பும் தான் நமது இயக்கத்திற்கு வெற்றியை தேடித் தந்துள்ளது.

இன்று சுய உதவிக் குழு மகளிர் நினைத்தால் எதையும் சாதிக்க முடியும் என்ற நிலை உருவாகி உள்ளது என்பதை அறியும் போது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. இருப்பினும் இன்னும் சில இடங்களில் பெண்கள் குறிப்பாக பெண் குழந்தைகள் பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகின்றனர். இதைத் தடுக்க நீங்கள் முன்வர வேண்டும். பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராக நடைபெறும் குற்றங்களைத் தடுக்கவும், குழந்தைத் தொழிலாளர் நிலையைப் போக்கவும், பெண் குழந்தைகளுக்கு கல்வியை தருவதில் உள்ள தடைகளை நீக்கவும், சுற்றுச் சூழலைக் காக்கவும் குரல் கொடுக்க நீங்கள் முன் வர வேண்டும்.

உங்களால் மட்டுமே இவைகளை செய்ய முடியும். நீங்கள் மட்டுமே போராடத் தயங்காதவர்கள். தடைகளைத் தகர்த்து வெற்றி பெறும் திறன் சுய உதவிக் குழு மகளிருக்கு மட்டுமே உள்ளது என்று எனக்கு மட்டுமல்ல அனைவருக்கும் தெரியும். உங்களால் உருவாக்கப்படும் சிறு பொறி நாளை பெரும் வெளிச்சத்தைத் தரும். எனவே நீங்கள் மேலும் மேலும் பல வெற்றிகளைப் பெற வேண்டும், சாதனைகள் பல படைக்க வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்புமாகும்.

உங்களின் செயல்பாட்டிற்கு ஊக்கம் அளிக்கும் வகையில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமும், புதுவாழ்வு திட்டமும் உங்களுக்கு என்றும் துணை நிற்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலாண்மை இயக்குநர்

மகளிரை குழுவாய் ஒருங்கிணைத்து, பயிற்சிகள் பல தந்து தொழில் வாய்ப்புகளை உருவாக்கி, அவர்களின் தன்னம்பிக்கைக்கு ஊக்கம் அளித்து வருவது நம் மகளிர் திட்டம் தான். இத்திட்டத்தின் வெற்றிக்கு நீங்கள் தான் காரணம். உங்களின் ஒருமித்த ஒற்றுமை உணர்வும், அயராத உழைப்பும் தான் நமது இயக்கத்திற்கு வெற்றியை தேடித் தந்துள்ளது.

TNPL Eco-friendly Notebooks - a cut above the rest - makes writing a pleasure.

TNPL Eco-friendly STUDENT NOTEBOOKS

- Eye-catching Designs
- Exclusive Range of Sizes
- Eco-friendly paper
- Smooth writing
- Attractive prices
- Real treat for Students

Go Green! Go for TNPL Ecofriendly Notebooks

Available at all leading stores

TNPL
Paper of the future

Tamil Nadu Newsprint and Papers Limited
No. 67, Mount Road, Guindy, Chennai 600 032, India.
Phone: 2235 4415-16, 2230 1094-98 Fax: 2235 0834, 2235 4614
Email: response@tnpl.co.in Web: www.tnpl.co.in

TNPL Paper every day... Eco-friendly all the way!

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு
முற்றம்
மலர் 16 இதழ் 02 ஜூன் 2014
விலை ரூ. 10/-

கௌரவ ஆசிரியர்
மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
எஸ். சின்னப்பன்
செயலர், முற்றம்

நிர்வாக ஆசிரியர்
டபிள்யூ. சிராஜுன்னிசா
பொது மேலாளர்

ஆசிரியர் குழு
ம. மனோகர சிங்
கூடுதல் இயக்குநர்
எம். மாதவி
கூடுதல் இயக்குநர்
எல். ராஜா
கூடுதல் இயக்குநர்

புது வாழ்வு திட்டம்
ஆர். வி. ஷஜீவனா
கூடுதல் திட்ட இயக்குநர்
கா. சுஜாதா ஜேக்கப்
கூடுதல் திட்ட இயக்குநர்
மோ. கணேஷ்குமார்
தகவல் தொடர்பு வல்லுநர்

பொறுப்பாசிரியர்
மு. மேகவர்ணம்
மக்கள் தொடர்பு அலுவலர்

முற்றம் உதவியாளர்
ஏ. கண்ணன்

கணக்கர்
சு. சசிகலா

கணினி வடிவமைப்பு
மு. செல்வம்

பிழை திருத்துபவர்
எஸ். எஸ். ரவிச்சந்திரன்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
ஆசிரியர், 'முற்றம்'
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.
தொலைபேசி: 044-2817 3412 / 3413
தொலைநகல்: 044-2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின்
ஆதரவுடன் வெளியிடப்படுகிறது

ஆசிரியரிடமிருந்து...

நீலப் புரட்சி...

கோடை முடிந்தும், வெயிலின் கொடுமை தாங்க முடியாத அளவிற்கு தொடர்ந்து கொண்டிருப்பதை நாம் அனைவரும் அறிவோம். கோடை காலத்தின் உச்சகட்டமான அக்னி நட்சத்திரத்திலிருந்த வெப்பத்தை விட, கோடைக்கு பிறகு அதிகமாகவே வெப்பம் சுட்டெரிக்கிறது. இதேநிலை நீடித்தால் பூமியில் வாழும் அனைத்து உயிரினங்களும் விரைவில் அழிந்து, நாம் வாழுகின்ற இந்த பூமியின் ஆயுட்காலமும் குறைந்து கொண்டே போய் விடுமோ என்ற பயம் உண்டாகிறது.

ஒருபக்கம் வெப்பத்தின் கொடுமை என்றால் மற்றொரு புறம் தண்ணீர் பிரச்சனை, காய்ந்து கிடக்கும் ஆறுகள், வற்றிப் போன ஏரிகள் மற்றும் குளங்கள், வறண்டு கிடக்கும் பூமி, உறிஞ்சப்படும் நிலத்தடி நீர் இவைகளை காணும் போது பூமியிலுள்ள உயிரினங்கள் எவ்வளவு காலம் வாழ முடியும் என்ற அச்சம் தோன்றுகிறது. இவை யாவும் எவ்வாறு நேர்ந்தது? யாரால் நேர்ந்தது? இவை அவசரமாகவும், தீவிரமாகவும் சிந்திக்கப்பட வேண்டிய கேள்விகள். இவைகள் இயற்கையாகவே ஏற்பட்ட பாதிப்புகள் அல்ல, மாறாக மனிதர்களாகிய நம்மால் உருவாக்கப்பட்டவைகளே. தங்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள இயற்கையை அழிக்கும் மனிதர்கள், அழிக்கப்படும் இயற்கை வளங்களை ஈடு செய்யும் வகையில், அவற்றை பாதுகாப்பதற்கான செயல்களை செய்கின்றார்களா என்றால் அதிகமாக எதுவும் கிடையாது எனலாம்.

புதியதாக பதவி ஏற்றுள்ள மத்திய அரசாங்கம் 'நீலப் புரட்சி'யை ஏற்படுத்துவோம் என குறிப்பிட்டுள்ளதும், வீடுகளில் கட்டாயமாக மழை நீர் சேகரிப்பு தொட்டிகளை அமைக்க தமிழக அரசு தீவிர நடவடிக்கைகளை மேற் கொண்டிருப்பதும் வரவேற்கப்பட வேண்டிய அம்சங்களாகும். மழை நீரை பூமிக்கு அடியில் சேர்த்து வைக்காத காரணத்தால், குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டு பல விளைவுகள் ஏற்படுகிறது. மேலும், கடலோரம் உள்ள பகுதிகளில் கடல் நீர் ஊடுருவி குடிப்பதற்குக் கூட தண்ணீர் கிடைக்காமல் அவதிக்குள்ளாகும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

இது உலகளவிலான ஒரு சமுதாய பிரச்சனையாகும். இப்பிரச்சனையை உலகளவில் சிந்திப்பதோடு நின்று விடாமல், நாம் வாழுகின்ற பகுதிகளில் இதற்கான நடவடிக்கைகளை உள்ளூர் அளவில் செயல்படுத்த ஒவ்வொருவரும் முயற்சிக்க வேண்டும். மழை நீர் சேகரிப்பு திட்டத்தில் அரசோடு சேர்ந்து, அனைவரும் முழு மூச்சில் ஈடுபட வேண்டும். பெருமளவில் மரங்களை நட்டு பாதுகாப்பதன் மூலம் மழையை பெற முடியும். நிலத்தடி நீரையும் பாதுகாக்க முடியும். சமூக பொறுப்போடு மழை நீரை சேகரிப்போம். பூமித்தாயை பாதுகாப்போம்.

இப்படிக்கு

(எஸ். சின்னப்பன்)
பதிப்பாளர் மற்றும் ஆசிரியர், முற்றம்

உள்ளே

ஜூலை 1 உலக மருத்துவர்கள் தினம்

மூலிகைகள் நிறைந்த கொல்லிமலை 8

பல்வேறு வகையான நோய் தீர்க்கும் அரிய மூலிகைகளும், சுவையான பழ வகைகளைக் கொண்ட தாவரங்களும், அரிய விலங்குகளும் கொல்லிமலையில் காணப்படுகின்றன.

அழகுக் குறிப்புகள்

மகளிர் திட்ட செயல்பாடுகள் ஆய்வு 21

மகளிர் திட்டம் மற்றும் வாழ்வாதார இயக்கம் ஆகியவற்றின் செயல்பாடுகளை ஆய்வு செய்து, மேலும் சிறப்பாக செயல்பட உரிய ஆலோசனைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

ஒவ்வொரு மழைத்துளியும் மகத்தானது!

அன்னாசிப்பழம்

உடல் நலத்திற்கு காக்கும் பழம்

உடலில் ஏற்படும் அநேக நோய்களைக் குணப்படுத்தி உடலுக்கு வலுவையும், இரத்த ஓட்டத்தையும் அதிகப்படுத்தும் ஆற்றல் அன்னாசிப் பழத்திற்கு உண்டு.

வாழ்வாதாரத்தை வளமாக்கும் வங்கி சேவைகள்...!

24

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!!
மழை நீரை சேகரிப்போம்!!!

சந்தாத் தொகையை 'முற்றம்' என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தக்க முறையில் வங்கி வரைவோலையாக மட்டுமே அனுப்ப வேண்டும். வங்கி வரைவோலையுடன், சந்தாதாரரின் பெயர், க/பெ. (அ) த/பெ., குழுவின் பெயர், வீட்டு எண், தெரு எண், கிராமத்தின் பெயர், தாலுக்காவின் பெயர், மாவட்டத்தின் பெயர் ஆகியவற்றுடன் அஞ்சல் குறியீட்டு எண்ணையும் (பின்கோடு எண்) தவறாமல் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். முற்றம் சந்தாக்களுக்குரிய புத்தகம் அந்தந்த நபருக்கு அனுப்ப வேண்டுமா? அல்லது மொத்தமாக எந்த முகவரிக்கு அனுப்ப வேண்டும் என்பதை தெளிவாகக் கடிதத்தில் குறிப்பிட வேண்டும்.

முற்றம் இதழ் சந்தா விபரம்

ஒரு ஆண்டு சந்தா	– ரூ. 100/–
இரண்டு ஆண்டு சந்தா	– ரூ. 150/–
மூன்று ஆண்டு சந்தா	– ரூ. 250/–
நான்கு ஆண்டு சந்தா	– ரூ. 300/–
ஆயுள் சந்தா	– ரூ. 600/–
புரவலர் கட்டணம்	– ரூ. 15,000/–

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவற்றை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும் ஆலோசனைகளும் வரவேற்கப்படுகிறது.

சுய உதவிக் குழு மகளிர் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்யும்வண்ணம் விற்பனைக் கண்காட்சிகளை நடத்தி, அவர்களின் பொருளாதார வளர்ச்சிக்கு வழிகாட்டுவதுடன், அவர்களை மேலும் ஊக்குவிக்கும் வண்ணம் பரிசுகளும் வழங்கியுள்ளது பாராட்டுக்குரியது.

மீனாட்சி ராமச்சந்திரன்,
வெள்ளை ரோஜா மகளிர் குழு,
சோளிங்கர், வேலூர் மாவட்டம்.

சுனாமி பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வரும் சுனாமிக்குப் பிந்தைய வாழ்வாதாரத் திட்டத்தின் செயல்பாடுகளை முற்றம் இதழ் மிகவும் சிறப்பாக, புகைப்படங்களுடன் மாதந்தோறும் வெளியிட்டு வருவது எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.

உறுப்பினர்கள்,
திருவள்ளுவர் மகளிர் சங்கம்,
பொன்னேரி, திருவள்ளூர் மாவட்டம்.

கல்விக் கடன் பெறுவது குறித்த பல்வேறு சந்தேகங்களுக்கும் மிகத் தெளிவாக விளக்கம் அளித்துள்ளது சிறப்பாக உள்ளது. வங்கிகளின் செயல்பாடுகள் குறித்த கட்டுரைகளும், சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகளும் முற்றத்திற்கு புதுப்பொலிவை தந்துள்ளன.

நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள்,
கடல் மல்லை சுய உதவிக் குழு,
செய்யூர், காஞ்சிபுரம் மாவட்டம்.

புதுவாழ்வு திட்டம் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் ஆகியவற்றின் செயல்பாடுகளினால் வளம் பெற்றுள்ள ஏழை மக்கள் மற்றும் வெற்றி பெற்ற சுய உதவிக் குழுக்கள் குறித்த செய்திகளையும், இளைஞர்களின் வேலைவாய்ப்பு செய்திகளையும் வெளியிட்டு வரும் முற்றத்திற்கு எங்களது வாழ்த்துகள்.

செல்வராணி, செயலாளர்,
கிராம வறுமை ஒழிப்பு சங்கம்,
வாழப்பாடி, சேலம் மாவட்டம்.

இப்படிக்கு

மின்னஞ்சல் : wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

www.tamilnadumahalir.org/mutram

தினம்...தினம்...

உலக மருத்துவர்கள் தினம்

மனிதர்களுக்கு ஏற்படும் நோய்களை போக்கி, அவர்களுக்கு வாழ்வளிக்கும் உன்னத சேவையினை ஆற்றும் மருத்துவர்களின் சேவையைப் பெருமைப்படுத்தும் வண்ணம் வருடந்தோறும் ஜூலை மாதம் 1ஆம் தேதி உலக மருத்துவர் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. இந்தியாவில் இந்த தினம், வங்காளத்தை சேர்ந்த மருத்துவர் பிதான் சந்திரராய் அவர்களின் நினைவாக தேசிய மருத்துவர் தினமாக அனுசரிக்கப்படுகிறது. பிதான் சந்திரராய், மேற்கு வங்க மாநிலத்தில் 1882ஆம் ஆண்டு ஜூலை மாதம் பிறந்தார். கல்கத்தா மருத்துவக் கல்லூரியில் ஒரே நேரத்தில் மருந்தியல் மற்றும் அறுவை மருத்துவத்திற்கான எம்.ஆர்.சி.பி. மற்றும் எஃப்.ஆர்.சி.எஸ். படிப்புகளை இரண்டாண்டுகள் மூன்று மாதங்களிலேயே படித்து முடித்து சாதனை புரிந்தவர். வங்காளத்தின் வளர்ச்சிக்கு பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தியவர் மருத்துவர் பிதான் சந்திர ராய். 1962ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் நாள் தன்னுயிர் நீத்த பிதான் சந்திர ராயின் நினைவாக ஆண்டுதோறும் தேசிய மருத்துவர் தினம் கடைபிடிக்கப்படுகிறது. ■

சிறந்த மருத்துவராகவும், விடுதலை இயக்க போராளியாகவும் திகழ்ந்த பிதான் சந்திர ராய், மேற்கு வங்காளத்தின் இரண்டாவது முதலமைச்சராக, 1948 முதல் 1962ஆம் ஆண்டு வரை 14 ஆண்டுகள் பதவி வகித்தார்.

சர்வதேச கூட்டுறவு தினம்

ஒவ்வொரு ஆண்டும் ஜூலை மாதத்தின் முதலாவது சனிக்கிழமை சர்வதேச கூட்டுறவு தினம் கடைபிடிக்கப்படுகிறது. இன்றைய உலகம் சமூக, பொருளாதார மாற்றங்களுடன் கூட்டுறவின் தேவையை உணர்ந்தே உள்ளது. இந்தியாவின் வளர்ச்சிக்கு கூட்டுறவுத் துறை ஒரு முக்கிய காரணமாக திகழ்ந்தது. கூட்டுறவு இயக்கம் நாட்டின் வளர்ச்சிக்கு ஒரு அமைப்பு மட்டுமல்ல, கிராமப்புறங்கள் முதல் நகர்ப்புறங்கள் வரை உள்ள பல ஆயிரம் கூட்டுறவு அமைப்புகளின் செயல்பாடுகள் ஜனநாயகத்திற்கு வலிவு சேர்க்கின்றன. ■



உலக மக்கள் தொகை தினம்

மக்கள் தொகை குறித்த விழிப்புணர்வை உலகளாவிய அளவில் மக்களுக்கு எடுத்துச் சொல்லும் வகையில் ஐக்கிய நாடுகள் சபை ஆண்டுதோறும் ஜூலை மாதம் 11ஆம் தேதியை உலக மக்கள் தொகை நாளாக அனுசரிக்க வேண்டுகோள் விடுத்தது.

மக்கள் தொகைப் பெருக்கத்தினால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன. மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்திட பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மக்கள் தொகைக் கல்விக்கு முக்கியமளிப்பதுடன், மக்கள் தொகைப் பெருக்கத்தினால் ஏற்படும் சமூகப் பொருளாதார தாக்கங்கள் பற்றிய செயல்பாடுகளை மேற்கொள்வது அவசியமாகிறது. ■

சர்வதேச சதுரங்க தினம்

பன்னாட்டு சதுரங்கக் கூட்டமைப்பின் வழிகாட்டலின் கீழ் சர்வதேச சதுரங்க தினம் ஒவ்வோர் ஆண்டும் ஜூலை மாதம் 20ஆம் தேதி அனுசரிக்கப்படுகிறது. உலகில் பல விளையாட்டுகள் காணப்பட்ட போதிலும் கூட, சதுரங்கம் முக்கியத்துவமான விளையாட்டுகளில் ஒன்றாக புராதன காலந்தொட்டு இன்று வரை மதிக்கப்படுகிறது. அரசர்களின் விளையாட்டு என வர்ணிக்கப்பட்ட சதுரங்கம், இருவர் விளையாடும் ஒரு பலகை விளையாட்டாகும். மதியூகமும், தந்திரமும் நிறைந்து, மூளைக்கு வேலை தரும் இவ்விளையாட்டு, கலையாகவும், அறிவியலாகவும் வர்ணிக்கப்படுகிறது. சதுரங்க விளையாட்டின் ஆரம்பம் குறித்து பல்வேறு கருத்துகள் பல்வேறுபட்ட கோணங்களில் முன் வைக்கப்பட்டுள்ளன. இருப்பினும் ஏழாம் நூற்றாண்டு காலக்கட்டங்களிலிருந்தே இந்தியாவில் விளையாடப்பட்டு வந்த விளையாட்டாகவே பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. எனவே சதுரங்க விளையாட்டின் ஆரம்பம் இந்தியா என்று கூறலாம். ஸ்டைநிட்ஸ், லாஸ்கர், காப்பபிளான்கா, அலேஹின், இயுவ், பொட்வின்னிக், சிமிஸ்லொவ், டால், பெட்ரொசியான், ஸ்பாஸ்கி, பிஷர், கார்ப்பொவ், கிராம்னிக், மேக்னஸ் கார்ல்சன் மற்றும் தமிழகத்தைச் சேர்ந்த விஸ்வநாதன் ஆனந்த் ஆகியோர் சதுரங்க விளையாட்டில் உலகப் புகழ் பெற்றவர்கள் ஆவார்கள். ■

இம்மையத்தில் சுய உதவிக் குழுக்கள் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ளன.

மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின்

பல்நோக்கு பயிற்சி மற்றும் உற்பத்தி மையம்

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆலோசனையின்படி, மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகத்தில், செயல்பாடற்ற நிலையில் இருந்த கட்டிட மைய வளாகத்தில் உள்ள ஓர் அறையில் மராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அங்கு மகளிர் சுய உதவிக் குழுக்களின் மூலம் செயல்படும் பிளாஸ்டிக் மறுசுழற்சி மையம் ஒன்றும் அமைக்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக அக்கட்டிட மையம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் இராமநாதபுரம் மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகின் கீழ் ‘பல்நோக்கு பயிற்சி மையம் மற்றும் உற்பத்தி மையமாக’ பெயர் மாற்றியமைக்கப்பட்டது.

இந்த மையத்தில் தற்போது சக்கரைக்கோட்டை, காரேந்தல் மற்றும் கும்பரம் ஆகிய ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் சார்பில் பிளாஸ்டிக் மறுசுழற்சி மையம், நாட்டுக் கோழி குஞ்சு பொறித்தல் மையம், பனை ஓலைப் பொருட்கள் தயாரித்தல் மையம் ஆகியவைகளும், சினேகம், மல்லிகை, இயற்கை, காந்திஜி மற்றும் செம்மலர் ஆகிய சுய உதவிக் குழுக்களின் சார்பில் சானிடரி நாப்கின் தயாரித்தல், பசுமை பை உற்பத்தி, காளான் வளர்ப்பு, கடல் சிப்பி அலங்காரப் பொருட்கள் மற்றும் நவநாகரீக ஆபரணங்கள் தயாரித்தல் போன்ற தொழில்களை செய்யும் மையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இம்மையத்தில் இயங்கும் ஒத்த தொழில் குழுக்களின் மூலம் உற்பத்தி செய்யப்படும் பல்வேறு விதமான பொருட்கள், இராமநாதபுரம் மாவட்ட வணிக வளாகத்தில் ஒப்படைக்கப்பட்டு, சக்கரக்கோட்டை ஊராட்சி கூட்டமைப்பு மூலம் விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த மையத்தில் செயல்பட்டு வரும் ஒத்தத் தொழில் குழுக்களின் உறுப்பினர்கள் அனைவரும் தங்களின் வாழ்வாதாரம் தற்போது கணிசமாக உயர்ந்துள்ளதாக மகிழ்ச்சியுடன் கூறுகின்றனர்.

மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுறுத்தலின்படி NBA (Nirmal Bharath Abiyan) திட்டத்தின் கீழ் இம்மையத்தில் பணிபுரியும் மகளிர் பயன்படுத்தும் வகையில் ரூ.4 இலட்சம் மதிப்பீட்டில் கழிப்பிடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

இந்த பல்நோக்கு பயிற்சி மற்றும் உற்பத்தி மையத்தில் புதிதாக பயிற்சி மையம் கட்ட நிதி கேட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் அவர்களுக்கு நேர்முக கடிதம் வரைந்ததின் பலனாக ரூ. 16 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு தற்போது கட்டிடப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மாதந்தோறும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் அவர்களும் இந்த மையத்திற்கு வருகை தந்து, அங்கு செயல்படும் ஒத்தத் தொழில் குழுக்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்து, மேலும் சிறப்பாக செயல்பட ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர்.

இந்த மையத்தில் இயங்கும் ஒத்த தொழில் குழுக்களின் மூலம் உற்பத்தி செய்யப்படும் பல்வேறு விதமான பொருட்கள், இராமநாதபுரம் மாவட்ட வணிக வளாகத்தில் ஒப்படைக்கப்பட்டு, சக்கரக்கோட்டை ஊராட்சி கூட்டமைப்பு மூலம் விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வாழ்வை மாற்றிய

புதுவாழ்வு திட்டம்

கூலி ஆட்களாக இருந்தவர்களை முதலாளியாக மாற்றிய புதுவாழ்வு திட்டம்

புதுவாழ்வு திட்டத்தின் வழிகாட்டுதலுடன் செயல்படும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், கிராமப்புறங்களில் வசிக்கும் ஏழை மக்களின் வாழ்வில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தி வருகின்றன. ஆண்களுக்கு நிகராக பெண்களும் அனைத்துத் துறையிலும் தங்களின் பங்களிப்பை அளிக்கின்றனர். அந்த வகையில் திருநெல்வேலி மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழுவினர் அச்சுத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

திருநெல்வேலி மாவட்டம், சங்கரன் கோவில் வட்டம், கரிவலம்வந்தநல்லூர் களப்பகுதியில் உள்ள பெரும்பத்தூர் ஊராட்சியில் வசிக்கும் சுய உதவிக் குழு மகளிர் 20 பேர் ஒன்றிணைந்து, அப்பகுதியில் செயல்படும் புதுவாழ்வு திட்டம் மற்றும் கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தின் உதவியுடன் ஸ்ரீ சாய் பிரிண்டிங் ஒத்த தொழில் குழுவினைத் தொடங்கியுள்ளனர்.

இக்குழுவின் உறுப்பினர்களுக்கு புதுவாழ்வு திட்டம் மூலம் சிவகாசியில் உள்ள சிவகாசி இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி பயிற்சி நிறுவனத்தில் 10 நாட்கள் பயிற்சி வழங்கப்பட்டது. பிரிண்டிங் குறித்த மேலும் பல விபரங்களை அறிந்து கொள்ள, தூத்துக்குடியில் உள்ள பிரிண்டிங் பிரஸுக்கு களப்பயணமாக சென்ற இக்குழுவினர் அங்கு அச்சுத் தொழில் குறித்த பல்வேறு விபரங்களையும் அறிந்து கொண்டனர்.

பின்னர் குழுவின் உறுப்பினர்கள் 20 பேரும் தங்கள் பங்குத் தொகையாக தலா ரூ. 15 ஆயிரம் வீதம் ரூ. 3 இலட்சம் செலுத்தினர். இந்தத் தொகையுடன் ஊராட்சி ஊக்க நிதி ரூ. 4 இலட்சம் சேர்த்து, மொத்தம் 7 இலட்சம் ரூபாயினை மூலதனமாகக் கொண்டு பிரிண்டிங் பிரஸுக்குத் தேவையான இயந்திரங்கள் வாங்கப்பட்டுள்ளது.

தற்போது ஸ்ரீ சாய் பிரிண்டிங் ஒத்த தொழில் குழுவினர் நடத்தும் அச்சகத்தில் மகளிர் திட்டம் மற்றும் புதுவாழ்வு திட்டம் ஆகியவற்றின் செயல்பாடுகளுக்குத் தேவையான அனைத்து பதிவேடுகள் மற்றும் இளைஞர் பயிற்சிக்கு தேவையான விழிப்புணர்வு நோட்டீஸ்கள் மற்றும் பிற வகையான பிரிண்டிங் வகைகள் அனைத்தும் சிறப்பாக செய்யப்பட்டு வருகின்றன.

'இதுநாள் வரை விவசாயத்தை நம்பி வாழ்ந்த தாங்கள், பிரிண்டிங் பிரஸ் தொடங்கியதால் இனி வளமான வாழ்வைப் பெறுவோம் என்றும், கூலி ஆட்களாக இருந்த எங்களை முதலாளிகளாக மாற்றி எங்கள் வாழ்க்கையில் வளமான வழிகாட்டியது புதுவாழ்வு திட்டம்தான்' என மகிழ்ச்சியுடன் கூறுகின்றனர் ஸ்ரீ சாய் பிரிண்டிங் ஒத்த தொழில் குழுவின் உறுப்பினர்கள்.

> தூத்துக்குடியில் உள்ள பிரிண்டிங் பிரஸுக்கு களப்பயணமாக சென்ற இக்குழுவினர் அங்கு அச்சுத் தொழில் குறித்த பல்வேறு விபரங்களையும் அறிந்து கொண்டனர்.

தங்களுக்கு தொழிற்பயிற்சி கொடுத்து, தொழில் வாய்ப்பை ஏற்படுத்தி தந்து, குடும்பத்தின் வறுமையைப் போக்கி, வாழ்வாதாரத்தை உயர்த்தி, வளமான வாழ்வை அமைத்துக் கொடுத்த தமிழக அரசின் புதுவாழ்வு திட்டத்திற்கும், பெரும்பத்தூர் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கும் நன்றி...நன்றி...நன்றி... என்கின்றனர் இக்குழுவினர்.

கொல்லிமலைக்கு ஒருமுறை சென்று வாருங்கள். இனிய அனுபவத்தைப் பெற்றிடுங்கள்.

மூலிகைகள் நிறைந்த

கொல்லிமலை...

ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய பழமையும் பெருமையும் கொண்ட கொல்லிமலை இயற்கை அன்னையின் அழகை ஒட்டுமொத்த குத்தகைக்கு எடுத்துக் கொண்ட சிறப்பினைப் பெற்றது. கடையேழு வள்ளல்களில் ஒருவரான வல்வில் ஓரி இந்தப் பகுதியை ஆண்டு வந்துள்ளார். பலா, அன்னாசி, கொய்யா, ஆரஞ்சு மரங்கள் அடர்ந்து வளர்ந்து செழுமையாக காட்சி அளிக்கும் இந்த மலையில் பல ஊர்கள் அமைந்துள்ளன. அவைகளில் பெரும்பாலான ஊர்களில் மலைவாழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

நாமக்கல்லில் இருந்து சுமார் 55 கி.மீ. தொலையில் அமைந்துள்ள கொல்லிமலைக்கு செல்ல நாமக்கல், சேந்தமங்கலம், இராசீபுரம், சேலம் ஆகிய இடங்களில் இருந்து பேருந்து வசதிகள் உள்ளன. 70 கொண்டை ஊசி வளைவுகளைக் கொண்ட கொல்லிமலைப் பாதையில் பெரிய அளவிலான வாகனங்கள் செல்ல இயலாது. காரவள்ளி என்ற இடம் வரை மட்டுமே பெரிய வாகனங்கள் செல்ல முடியும்.

அறப்பளீஸ்வரர் ஆலயம்

இங்கு 12ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட அறப்பளீஸ்வரர் ஆலயம் உள்ளது. இக்கோவிலுக்கு பக்கத்தில் மீன்பள்ளி ஆறு ஓடுகிறது. இந்த ஆற்றில் இறைவன் மீன்களின் வடிவில் விளங்குவதாக ஐதீகம். எனவே பக்தர்கள் கோவிலுக்கு செல்லும் முன்னரே இந்த ஆற்றில் உள்ள மீன்களுக்கு சாதம், பலவகை தின்பண்டங்களை வைத்து வழிபட்ட பின்னரே கோவிலுக்குள் சென்று அறப்பளீஸ்வரரை வணங்குகின்றனர். வருடந்தோறும் ஆடிப்பெருக்கு விழாவினை, பாரம்பரிய முறையுடன் கொண்டாடுகின்றனர். திருவிழா சமயத்தில் ஆற்றில் உள்ள பெரிய மீன்களைப் பிடித்து அவைகளுக்கு மூக்கு குத்தி மீண்டும் ஆற்றில் விடும் நிகழ்ச்சியும் நடைபெறுகிறது.

ஆகாய கங்கை அருவி

அறப்பளீஸ்வரர் கோவிலுக்கு அருகில் ஆகாயகங்கை அருவி உள்ளது. சுமார் 600 அடி உயரத்திலிருந்து விழும் இந்த அருவி நீரில் பல்வேறு மூலிகைகளின் சத்தும் கலந்துள்ளதால், இந்நீரில் குளிப்பவர்களுக்கு பல்வேறு உடல் உபாதைகளும் நீங்குகிறது. வருடத்தின் அனைத்து நாட்களிலும் இந்த அருவியில் நீர் விழுந்து கொண்டே இருக்கும்.

கொல்லிப்பாவை

இம்மலைப் பகுதியில் தவம் செய்த முனிவர்கள் தங்கள் தவத்திற்கு இடையூறு நேராதவாறு காத்துக் கொள்ள தெய்வீகச் சக்தி வாய்ந்த கொல்லிப்பாவை என்னும் பதுமையை அமைத்தார்கள் என்று சொல்லப்படுகிறது. இந்தப் பாவை அழகிய பெண் உருவமுடையது என்றும், உடல் உறுப்புகள் அசையும் தன்மையைக் கொண்டவை என்றும், தீய நோக்கத்துடன் இந்தப் பகுதிக்கு வருபவர்களை, தன்பால் கவர்ந்து கொன்று விடும் என்றும், காற்று மழை முதலிய இயற்கை சீற்றங்களால் இந்தக் கொல்லிப் பாவை எந்த பாதிப்பும் அடையாது என்றும் சிந்தாமணி, குறுந்தொகை, சிலப்பதிகாரம், நற்றிணை மற்றும் குறுந்தொகை ஆகிய பழந்தமிழ் நூல்களின் வாயிலாக அறிய முடிகிறது. கொல்லிப்பாவையால் இம்மலை காக்கப்படுவதால் இது கொல்லிமலை எனப் பெயர் பெற்றதாக சொல்லப்படுகிறது. கொல்லிப்பாவையை இம்மலைவாழ் மக்கள் 'எட்டுக் கை அம்மன்' என்று கூறுகின்றனர்.

படகு இல்லம்

கொல்லிமலையில் வாசலூர்பட்டி என்ற இடத்தில் படகுத்துறை ஒன்று அமைந்துள்ளது. இங்குள்ள ஏரியில் படகு சவாரி செய்வது சுற்றுலாப் பயணிகளுக்கு மிகவும் மகிழ்ச்சியான அனுபவமாகும். சீக்குப்பாறை மற்றும் தற்கொலை முனை ஆகியவற்றில் இருந்து பார்க்கும் போது மலையின் இயற்கை காட்சிகள் மிகவும் அருமையாக இருக்கும். இங்கு பார்வை மாடமும் அமைக்கப்பட்டுள்ளது.

> சுற்றுலாப் பயணிகள் கவரும் வகையில் பல்வேறு இடங்களும் இந்த மலையில் உள்ளன.

முருகன் கோவில்

பழமை வாய்ந்த முருகன் கோவில் ஒன்று இங்கு அமைந்துள்ளது. இந்தக் கோவிலில் உள்ள மூலவரை நேருக்கு நேராக நின்று வணங்கினால் வேடனைப் போலவும், வலதுபுறமாக நின்று வணங்கினால் ஆண் வடிவமாகவும், இடதுபுறமாக நின்று வணங்கினால் பெண் வடிவமாகவும் காட்சி அளிக்கிறார் மலை அடிவாரத்தில் பாறைகளுக்கு இடையே யானை வடிவிலான வற்றாத சுனை காணப்படுகிறது. இதை 'யானைப்பாழி தீர்த்தம்' என்கின்றனர். இந்த சுனையில் ஆண்டு முழுவதும் இரும்புச் சத்துடன் கூடிய தண்ணீர் ஊறுகிறது.

பல்வேறு வகையான நோய் தீர்க்கும் அரிய மூலிகைகளும், சுவையான பழ வகைகளைக் கொண்ட தாவரங்களும், அரிய விலங்குகளும் இந்த மலையில் காணப்படுகின்றன. சுற்றுலாப் பயணிகள் கவரும் வகையில் பல்வேறு இடங்களும் இந்த மலையில் உள்ளன.



அறப்பளீஸ்வரர் கோவிலுக்கு அருகில் ஆகாயகங்கை அருவி உள்ளது. சுமார் 600 அடி உயரத்திலிருந்து விழும் இந்த அருவி நீரில் பல்வேறு மூலிகைகளின் சத்தும் கலந்துள்ளதால், இந்நீரில் குளிப்பவர்களுக்கு பல்வேறு உடல் உபாதைகளும் நீங்குகிறது. வருடத்தின் அனைத்து நாட்களிலும் இந்த அருவியில் நீர் விழுந்து கொண்டே இருக்கும்.

இயற்கை நமக்கு பல்வேறு அரிய மூலிகைகளைத் தந்துள்ளது. அவற்றை பயன்படுத்துவதன் மூலம் பல்வேறு நோய்களின் தாக்குதலில் இருந்து காத்துக் கொள்ளலாம்.

திருமதி. சாந்தா பூவராகன்,
திருச்சிராப்பள்ளி.

முடக்கறுத்தான் கீரை தோசை

செய்முறை

கீரைகள் நமக்கு பல்வேறு வகையிலும் நன்மை புரிகின்றன. நோய்களின் தாக்குதலில் இருந்து நம்மைக் காக்கும் கீரைகளை அடிக்கடி சாப்பிட வேண்டும்.

முடக்கறுத்தான் கீரை கிராமப்புறங்களில் வேலிகளில் படர்ந்து கிடக்கும் ஒருவகைக் கீரையாகும். கீரைக் கடைகளிலும் இக்கீரைகள் கிடைக்கும்.

இந்தக் கீரையை தண்ணீரில் நன்கு அலசி, ஆய்ந்து வைத்துக் கொள்ளவும். தோசைக்கு மாவு அரைக்கும் போது 1 படி அரிசிக்கு 1 பிடி கீரை வீதம் சேர்த்து அரைத்துக் கொள்ளவும். அரைத்த உளுந்து மாவையும், தேவையான அளவு உப்பையும் இந்த மாவுடன் சேர்த்து கலந்து, இரவு புளிக்க வைத்து மறுநாள் தோசையாக வார்த்து சாப்பிடவும்.

இந்த தோசை சாப்பிட்டால் மூட்டுவலி, ஜீரண கோளாறுகள் தீரும். நன்கு பசி எடுக்கும். மலச் சிக்கல், வாயு உபத்திரவம் போன்றவை தீரும். மிளகு ரசம் வைக்கும் போது, முடக்கறுத்தான் கீரை இலைச்சாற்றையும் சேர்த்து கொதிக்க வைத்து அருந்தினாலும் மேற்கண்ட உபத்திரவங்கள் தீரும். ■

அன்னாசிப் பழம்

அன்னாசிப் பழத்தில் வைட்டமின் பி2 உயிர்ச்சத்து அதிக அளவில் இருக்கிறது. வைட்டமின் சி-யும் ஓரளவு கலந்திருக்கிறது. அதனால் உடலில் ஏற்படும் அநேக நோய்களைக் குணப்படுத்தும் ஆற்றல் இப்பழத்திற்கு உண்டு. உடலுக்கு வலுவையும், இரத்த ஓட்டத்தையும் அதிகப்படுத்தும் ஆற்றலும் இதற்குண்டு. தலைவலி, ஒருபக்கத் தலைவலி, கண் பார்வை கோளாறுகள், கண் தொடர்பான இதர தொல்லைகள் காது சம்பந்தமான வியாதிகள், தொண்டை வலி, பல் வலி, இருமல், வாயிலும் நாக்கிலும் ஏற்படும் புண்கள், மூளைக் கோளாறுகள், நினைவு தவறுதல் போன்ற நோய்களைக் குணப்படுத்துவதற்கு அன்னாசி பழம் உதவுகிறது.

பித்தம் அதிகரிப்பதினால், கிறு கிறுப்பு மயக்கம், வாந்தி, மந்தம், நாக்கின் ருசியின்மை போன்றவை இப்பழம் சாப்பிட்டால் தீரும். இரத்த உற்பத்தியை அதிகமாக்குவதுடன், இரத்தத்தை தூய்மைப்படுத்தும். பித்தம் தொடர்பான அனைத்து நோய்களையும் அன்னாசிப்பழம் போக்கும். இதயம் சம்பந்தப்பட்ட நோய்களையும் குணமாக்க வல்லது இந்தப் பழம். இதயம், மூளை, எலும்பு போன்றவற்றிற்கு வலிமை தந்து, நரம்புத் தளர்ச்சியைப் போக்கும். வாய் நாற்றத்தையும் நீக்கும்.

வயிற்று வலியால் அவதிப்படும் குழந்தைகளுக்கு அன்னாசி பழத்துண்டுகளை சாப்பிடக் கொடுத்தால் வலி போகும். பெண்களுக்கு வெள்ளைப்படுதல் ஒரு தொல்லைக் கொடுக்கும் வியாதியாகும். அதைக் குணப்படுத்த அன்னாசிப் பழம் உதவுகிறது.

கோடைக் காலங்களில் அன்னாசிப் பழத்தை சாறு பிழிந்து தாகம் தணிக்கும் பானமாக அருந்தலாம். இந்தப் பழம் உஷ்ணத்தை அதிகப்படுத்தும் ஆற்றல் பெற்றது. அதனால் மாதவிடாய் நாட்களில் பெண்கள் சாப்பிடாமல் இருப்பது நல்லது. தாய்ப்பால் கொடுக்கும் தாய்மார்களும் இந்தப் பழத்தைத் தவிர்க்க வேண்டும். காய்ச்சல் மற்றும் மூலநோய் போன்றவற்றின் தாக்குதலுக்கு ஆளானவர்கள் இந்தப் பழத்தை சாப்பிடக் கூடாது.

உடலில் ஏற்படும் அநேக நோய்களைக் குணப்படுத்தி உடலுக்கு வலுவையும், இரத்த ஓட்டத்தையும் அதிகப்படுத்தும் ஆற்றல் அன்னாசிப் பழத்திற்கு உண்டு.

கேள்வி-பதில்

கேள்வி :
என் அண்ணன் 12 வருடங்களாக யானைக்கால் நோயினால் அவதிப்படுகிறார். நாட்டு வைத்தியம், ஆங்கில வைத்தியம் என அனைத்தும் முயற்சித்தும் குணமாகவில்லை. வேறு முறையில் தீர்வு உள்ளதா?

பதில் :
தற்போது யானைக்கால் வியாதி பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டு விட்டது. இருப்பினும் பிளாஸ்டிக் சர்ஜரி மூலம் யானைக்கால் நோயை முற்றிலு மாக குணப்படுத்த முடியும். காலில் தேவையற்ற பகுதிகளை நீக்கி விட்டு, அவரவர் உடலில் இருந்தே தோல் எடுத்து சிகிச்சை செய்யப்படுகிறது. மேலும் விபரங்களை நோயாளியை பரிசோதித்து பார்த்த பின்னர் மருத்துவர் விளக்கிக் கூறுவார்கள். எனவே தகுந்த பிளாஸ்டிக் சர்ஜரி மருத்துவரை அணுகி சிகிச்சை மேற்கொள்ளுங்கள்.

கேள்வி :
சோயாவை வேகவைத்து சாப்பிட்டால்தான் புரதம் கிடைக்குமா? மாவாக அரைத்து கஞ்சியாக குடித்தால் பயன் கிடைக்குமா?

பதில் :
சோயா என்பது புரதச் சத்துக்கள் நிறைந்த ஒரு தானியமாகும். சோயாவை எப்படி வேண்டுமானாலும் சாப்பிடலாம். சோயாவை நீரில் ஊற வைத்து அரைத்து நவதானியங்களுடன் கலந்து சாப்பிடலாம். வேக வைத்தும் சாப்பிடலாம். எப்படி சாப்பிட்டாலும் அதில் உள்ள புரதம் வீணாகாது. எனவே அடிக்கடி உணவுடன் சோயாவையும் சேர்த்து சாப்பிடுவது நமது உடல் நலத்திற்கு நன்மையை தரும்.

அழகுக் குறிப்புகள்...

அன்றாடம் நமது சமையலறையில் நாம் பயன்படுத்தும் பொருட்களைப் பயன்படுத்தியே நமது உடல் அழகைப் பராமரிக்கலாம்.

முள்ளங்கி சாறு

2 ஸ்பூன் முள்ளங்கி சாற்றுடன், 2 ஸ்பூன் மோர் சேர்த்து முகத்தில் தடவி, ஒரு மணி நேரம் கழித்து, சுடுநீரில் முகத்தை கழுவ வேண்டும். இதை தினசரி செய்தால், முகத்தில் ஏற்படும் தவிட்டு நிற புள்ளிகள் மறையும்.

கடலை மாவு

கடலை மாவுடன் சிறிது மஞ்சள் தூள், எலுமிச்சை சாறு, ஒரு டேபிள் ஸ்பூன் பால் கலந்து முகத்தில் தடவி, காய்ந்தவுடன் சுடுநீரில் முகத்தை கழுவினால் முகம் மிருதுவாகும்.

பப்பாளி பழம்

பப்பாளி பழத்தை அரைத்து முகத்தில் தொடர்ந்து தடவி வர முகப்பரு, கரும்புள்ளி ஆகியவை மறையும். பூசணிக்காயை சிறு துண்டுகளாக்கி அதை கண்களை சுறறி வைக்க கண்களைச் சுற்றி ஏற்படும் கருவளையம் மறையும்.

செயற்கை வாயு நிரம்பியுள்ள குளிர்பானங்களை அருந்துவதைத் தவிர்த்து பழ வகைகளை அதிகம் சாப்பிடுவது அவசியம். இதனால் உடலுக்குத் தேவையான நீர்ச்சத்து கிடைப்பதுடன், ஆரோக்கியத்துடனும் சுறுசுறுப்புடனும் உடல் நிலை இருக்கும்.

நம் உடல் அழகைப் பராமரிக்கும் சில பொருட்களை வீட்டிலேயே எளிதாக செய்யலாம்.

தயிர் – மோர்

தயிருடன் கடலை மாவு கலந்து முகத்தில் தடவி 15 நிமிடம் கழித்து முகத்தை கழுவ வேண்டும். இவ்வாறு தொடர்ந்து செய்தால் முகத்தில் ஏற்படும் சுருக்கம் மறையும். புளித்த மோரை முகத்தில் தடவி, 15 நிமிடம் கழித்து மிதமான சுடுநீரில் முகத்தை கழுவினால் முகம் பொலிவு பெறும். தொடர்ந்து 15 நாட்கள் இதை செய்து வந்தால் நல்ல பலன் கிடைக்கும்.

பாலாடை

பாலாடை இரண்டு டீஸ்பூன், கடலை மாவு ஆறு டீஸ்பூன், எலுமிச்சம் பழச்சாறு 10 சொட்டு, கிளிசரின் ஒரு டீஸ்பூன் ஆகியவற்றை ஒன்றாகக் கலந்து தினமும் ஒருமுறை முகம், கை, கழுத்து பகுதிகளில் தடவினால் வெயிலால் ஏற்படும் கருமை நீங்கும்.

தூதுவளை கீரை

மூலிகை வகையைச் சேர்ந்த இந்த கீரையின் வேர் முதல் பழம் வரை எல்லா பாகங்களும் பயன்படுகிறது. தூதுவளை இலையை பிழிந்து எடுத்த சாற்றை 1 அல்லது 2 துளி காதில் விட்டால் காதுவலி, காதில் சீழ் வடிதல் ஆகியவை குணமடையும். இலையை நெய்யில் வதக்கி துவையலாகவோ குழம்பாக கடைந்தோ சாப்பிட்டால் கபக் கட்டு நீங்கி, உடல் பலமும் அறிவு தெளிவும் உண்டாகும். இலைச் சாற்றை சம அளவு நெய்யில் காய்ச்சி காலை மாலை ஒரு தேக்கரண்டி சாப்பிட்டு வர காசம், மார்பு சளி நீங்கும்.

வாழைத்தண்டு

நார்ச்சத்து நிறைந்த வாழைத்தண்டை சாப்பிட்டால், குடலில் சிக்கியிருக்கும் வேண்டாத பொருட்கள் வெளியேறும். குடல் சம்பந்தப்பட்ட பல கோளாறுகளை நீக்கும் வாழைத்தண்டை சாம்பாராக வைத்து சாப்பிடலாம். இத்தண்டுடன் பருப்பு, இஞ்சி, பூண்டு சேர்த்து கூட்டாக சமைத்து சாப்பிடலாம். சிறுநீரிலுள்ள கற்களை கரைத்து வெளியேற்றும் ஆற்றல் வாழைத்தண்டிற்கு உண்டு.

முல்லைப் பூ

பல்வேறு மருத்துவ குணங்கள் முல்லைப் பூவிற்கு உண்டு. ஒரு கைப்பிடி அளவு முல்லைப் பூவை நீர் விட்டுக் காய்ச்சி பாதியாக வற்றியதும், அந்த தண்ணீரில் 15 மில்லி அளவு குடித்து வந்தால் பெண்களுக்கு ஏற்படும் மாதவிடாய் கோளாறுகள் குணமாகும். சொறி, சிரங்கு போன்ற நோய்களால் பாதிக்கப்படுபவர்கள், முல்லைப் பூவினை நன்கு அரைத்து, அதை உடல் முழுவதும் தடவி, அரைமணி நேரம் கழித்து தேய்த்து குளித்து வந்தால் நிவாரணம் கிடைக்கும்.

(சென்ற இதழ் தொடர்ச்சி) பகுதி – 6

பத்மா வெங்கடேசன்,
மேலாளர், இந்தியன் வங்கி

பெண்களின் முன்னேற்றத்திற்காக வங்கிகள்...!

கடந்த சில மாதங்களாக வங்கியில் கணக்கு துவங்குவது எப்படி என்பதை முற்றம் இதழ் வாயிலாக அறிந்து கொண்டோம். பல்வேறு விதமான கணக்குகள், வைப்பு நிதி மற்றும் கடன் பற்றிய விவரங்களை படித்து பயன் பெற்றோம். இப்போது சுய உதவிக் குழு கடன் உதவி மூலம் ஏழை எளிய மக்கள் தம் வாழ்வை திறம்பட நடத்த உதவி புரியும் வங்கிகளின் சேவையை வெளிச்சம் போட்டு பார்க்கலாமா...!

மகளிர் சுய உதவிக் குழு மூலம் நாட்டின் பொருளாதாரத்தை நேர்படுத்திய ஒரு மிக பிரசித்தி வாய்ந்த திட்டம் – மகளிர் மேம்பாட்டு திட்டம்.

நமது நாட்டிலேயே இந்த சீரிய திட்டத்தை தமிழக அரசுடன் இணைந்து 1989ஆம் ஆண்டு இந்தியன் வங்கி தர்மபுரி மாவட்டத்தில் முதன்முதலில் செயல்படுத்தியது. பின்பு இத்திட்டத்தில் அனைத்து வங்கிகளும் பங்கேற்று மாநிலம் முழுவதும் விரிவாக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ்

மகளிர் சுய உதவிக் குழுக்களை ஊக்கப்படுத்துதல்

மகளிர் குழுக்களின் கடன் தேவைகளை நெறிப்படுத்துதல்

குழுக்களின் திறமைகளை உயர்த்துதல்

குழுக்கள் தயார் செய்த பொருட்களுக்கும் சந்தைக்கும் ஒரு பாலம் அமைத்தல்

குழுக்களுக்கென்று ஒரு பயிற்சி மையம் அமைத்தல்,

வங்கியின் நிபுணர்களைக் கொண்டு தனிப்பட்ட கவனம் கிடைக்குமாறு செய்தல், வியாபார வளர்ச்சி விகிதம் மற்றும் அதன் தரத்தை உயர்த்தும் வழிமுறைகளை செயல்படுத்துதல், சுய உதவிக் குழுக்களுக்கென்று ஒரு மாதிரி வடிவத்தை நிறுவி கிராமப்புறங்கள் மற்றும் நகரங்களில் வாழும் ஏழை எளிய மக்களுக்கு கடன் வழங்குதல் ஆகிய முக்கிய சேவைகள் செயல்படுத்தப்படுகின்றன.

கிராமத்தில் வாழும் ஏழை எளியோரை மட்டுமல்லாது நகரத்தில் வாழும் வசதி குறைவான மக்களின் பொருளாதார தேவையை நிறைவு செய்யும் பொருட்டு, இந்தியன் வங்கி நாடெங்கும் 45 சுய உதவிக் குழுக்களுக்கான சிறப்புக் கடன் கிளை (மைக்ரோசேட் கிளை) துவங்கி செயல்படுத்துகிறது.

சுய உதவிக் குழுக்கள் மற்றும் NGOக்களின் தேவைகளுக் கேற்ப கண்காட்சி கூடம், நேர்காணல் அறை, ஆலோசனை கூடம், சிறு நூலகம் என்று அனைத்து வசதிகளை உள்ளடக்கிய வங்கிக் கிளையே மைக்ரோசேட் வங்கிக் கிளை ஆகும்.

மகளிர் சுய உதவிக் குழு மூலம் நாட்டின் பொருளாதாரத்தை நேர்படுத்திய ஒரு மிக பிரசித்தி வாய்ந்த திட்டம் – மகளிர் மேம்பாட்டு திட்டம்.

மேலும் விபரங்களுக்கு இந்தியன் வங்கி, கார்ப்பரேட் அலுவலகத்தை அணுகவும் போன்: 2813 4036

(தொடரும்)

சிறந்த கறவை மாடுகளைத் தேர்ந்தெடுக்க...!

சுறுசுறுப்பாகவும், சாந்தமான மனநிலை கொண்டதாகவும் மாடுகள் இருக்க வேண்டும்.

பக்கவாட்டிலிருந்து பார்க்கும் போது மாட்டின் உடல் நீள முக்கோண வடிவமாகக் காணப்பட வேண்டும்.

மாட்டின் முதுகு நேர்கோடாகவும், திமில் இல்லாமலும் இருக்க வேண்டும்.

மடி தொடுவதற்கு பஞ்சு போல இருக்க வேண்டும்.

மடிக் காம்புகள் மடியின் நான்கு பகுதிகளிலும் சம இடைவெளியில் அமைந்திருக்க வேண்டும்.

பால் கறக்கும் போது பால் எளிதில் வர வேண்டும்.

மடியில் இருக்கும் இரத்தக் குழாய்கள் புடைத்துக் காணப்பட வேண்டும்.

மாட்டின் தோல் எண்ணை தடவியது போன்று பளபளப்பாகவும் மிருதுவாகவும் இருக்க வேண்டும்.

பால் கறக்கும் போது மாட்டின் கால்களை கட்டியோ, தடியை வைத்து பயமுறுத்தியோ, மூக்கணாங் கயிற்றைப் பிடித்துக் கொண்டோ பால் கறக்க வேண்டிய பழக்கமுள்ள மாடுகளை வாங்கக் கூடாது.

ஒன்று அல்லது இரண்டு கன்றுகளை ஈன்ற மாடுகள் கன்று ஈன்ற ஒன்று அல்லது இரண்டு மாதங்களுக்குள் வாங்குவது நல்லது.

டாக்டர் பி. துரைராசன்,
கால்நடை மருத்துவர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

பாட்டி வைத்தியம்

கஞ்சி, கம்பு போன்றவை சாப்பிட்டதால் வயிறு உப்புசம் ஏற்பட்ட மாடுகளுக்கு முதலுதவியாக 30 – 50 கிராம் ஆப்ப சோடாவினை இரண்டு லிட்டர் வெதுவெதுப்பான வெந்நீரில் கலந்து கொடுத்தால், வயிறு உப்புசம் குறையும். உடனடியாக கால்நடை மருத்துவரை கொண்டு சிகிச்சை அளித்தால் இறப்பிலிருந்து மாட்டினைக் காப்பாற்றலாம்.

மழை நீரை சேகரிப்போம்! நிலத்தடி நீர் வளத்தை காத்திடுவோம்!!

மழை நீர் சேகரிப்பு என்பது மழை நீரைத் திரட்டி, ஒருங்கே குவித்து, சேமித்து வைப்பது ஆகும். மழை நீரை சேகரித்து பொது மக்களின் குடிநீர் தேவைகளுக்கு, கால்நடைகளுக்கு, நீர்ப்பாசனம் மற்றும் நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்துவதற்குப் பயன்படுத்தலாம். வீடுகள், கட்டிடங்களின் மேற் கூரைகளில் இருந்தும் இதற்காகத் தயார் செய்யப்பட்ட தரை வழியாகவும் சேகரிக்கப்படும் மழை நீரை குடிநீருக்கான முக்கிய ஆதாரமாகப் பயன்படுத்தலாம்.

பிளாஸ்டிக்கைத் தவிர்ப்போம்! சுற்றுச்சூழலைக் காப்போம்!!

வெறும் 20 நிமிடங்கள் மட்டுமே நமக்குப் பயன்படும் பிளாஸ்டிக் பைகள் 1000 ஆண்டுகள் ஆனாலும் அழிவதில்லை. மண்ணிலேயே தங்கி முதல் காரியமாக மழைத் தண்ணீர் பூமிக்குள் போகாமல் தடுத்து விடுகிறது. இதன் விளைவாக நிலத்தடி நீரின் அளவு தாழ்ந்து கொண்டே போகிறது. பிளாஸ்டிக்கினால் மனிதர்களுக்கு மட்டும் பாதிப்பில்லை. பறவைகள், விலங்குகள், கடல் வாழ் உயிரினங்கள், காற்று, நீர், மண் போன்றவையும் பாதிப்பிற்கு ஆளாகின்றன.

நம் மாவட்டம்

நாகப்பட்டினம்

கூட்டமைப்புகளுக்கு நிதி

நாகப்பட்டினம் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவி வழங்கிய வங்கிகள், சிறப்பாக செயல்படும் கூட்டமைப்புகள், சுய உதவிக் குழுக்கள் ஆகியவற்றிற்கு விருதும், மறுசீரமைக்கப்பட்ட கூட்டமைப்புகளுக்கு ஊக்க நிதியும் மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்கள். இவ்விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. து. முனுசாமி, இ.ஆ.ப., அவர்களும், மகளிர் திட்ட அலுவலர் மற்றும் உதவித் திட்ட அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

தேனி

கண்காணிப்புக் குழு கூட்டம்

தேனி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் சானிடரி நாப்கின் கொள்முதல் / விற்பனை கண்காணிப்புக் குழு கூட்டம் மாவட்ட ஆட்சியர் டாக்டர் கே.எஸ். பழனிசாமி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கொள்முதல் செய்யத் தயாராக உள்ள நாப்கின் களின் எண்ணிக்கை, அரசு நிர்ணயம் செய்த விலை மற்றும் உற்பத்தி செலவு விபரங்கள் பற்றி ஆய்வு செய்யப்பட்டது. மகளிர் திட்ட அலுவலர் திருமதி. ஜா. உஷாதேவி, சுகாதார துறை இணை இயக்குநர், கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் உட்பட பலர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

திருநெல்வேலி

கிராம சபைக் கூட்டம்

மக்களின் பங்கேற்பும், வெளிப்படையானத் தன்மையும் சமூக மேம் பாட்டுத் திட்டங்களின் வெற்றிக்கு அடிப்படையாகும். தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் அனைத்து செயல்பாடுகளிலும் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்து மக்கள் பங்கேற்புடன் செயல்படுத்தப்படுகிறது. ஊரக வாழ்வாதார இயக்கம் தங்கள் கிராமத்திற்கு தேவையா என்பது கிராம சபையில் விவாதிக்கப்பட்டு, இயக்க ஏற்பு தீர்மானம் கிராம சபையில் நிறைவேற்றப்படுகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் இரண்டாம் கட்டமாக தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்படும் ஊராட்சிகளில் 01.06.2014 அன்று நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் வாழ்வாதார இயக்க ஏற்பு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியத் திற்குட்பட்ட புதுக்குடி கிராம ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் முனைவர் மு. கருணாகரன், இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். இயக்க ஏற்பு தீர்மானம் நிறைவேற்றப்பட்ட கிராம சபாவிற்கு மாவட்ட ஆட்சியர் வருகை புரிந்தது மக்கள் மத்தியில் புது உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

திருப்பூர்

வேலை வாய்ப்பு பயிற்சிகள் ஆய்வு

திருப்பூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் வழங்கப்படும் இளைஞர் திறன் வளர்ப்பு மற்றும் வேலை வாய்ப்பு பயிற்சிகளை, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர் திருமதி. எம். மாதவி அவர்கள் ஆய்வு செய்தார். NIFT - TEA பயிற்சி நிறுவனத்தில் வழங்கப்பட்டு வரும் Garments Construction Techniques பயிற்சிகளை ஆய்வு செய்த கூடுதல் இயக்குநர் அவர்கள், பயிற்சிகள், பாடத் திட்டம், போன்றவை குறித்த விபரங்களைக் கேட்டறிந்தார். இந்த ஆய்வின்போது மாவட்ட திட்ட இயக்குனர் (பொ) திரு. பி. திரவியம், பயிற்சி நிறுவனத்தின் முதல்வர் மற்றும் துணை முதல்வர் ஆகியோர் உடனிருந்தனர். ■

நாமக்கல்

துவக்க நிதி வழங்குதல்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் நம் மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் படிப்படியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி நாமக்கல் மாவட்டத்தில் 2013–14ஆம் ஆண்டு முதல் கட்டமாக 87 ஊராட்சிகளில் வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதில் 35 ஊராட்சிகளில் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இந்த கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் சிறப்பாக செயல்பட ஏதுவாக அவைகளுக்கு துவக்க நிதி வழங்கப்படுகிறது.

இதன்படி நாமக்கல் மாவட்டம் மோகனூர் வட்டாரத்தைச் சேர்ந்த நன்செய் இடையார், சின்ன பெத்தாம்பட்டி, ஆண்டாபுரம், அரசநத்தம் ஆகிய நான்கு ஊராட்சிகளுக்கும், புதுச்சத்திரம் வட்டாரத்தில் உள்ள ஏ.கே. சமுத்திரம், கண்ணூர்பட்டி, காரைக்குறிச்சி, இலக்கபுரம் ஆகிய நான்கு ஊராட்சிகளுக்கும் முதல்கட்டமாக தலா ரூ. 50,000/– வீதம் ஊக்க நிதியினை மாவட்ட ஆட்சியர் திரு வ. தட்சணாமூர்த்தி, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.

நீலகிரி

மகளிர் திட்டப் படகிற்கு பரிசு

நீலகிரி மாவட்டத்தில் கோடை விழாவினை முன்னிட்டு உதகமண்டலம் ஏரியில் படகுப் போட்டி நடைபெற்றது. இந்தப் போட்டியில் பல்வேறு துறைகளின் சார்பாக செயல் திட்ட விளக்கங்களை விளக்கி அலங்கரிக்கப்பட்ட படகுகள் அணிவகுத்து வந்தன. இதில் நீலகிரி மாவட்ட மகளிர் திட்டத்தின் சார்பிலும் அலங்கரிக்கப்பட்ட படகு கலந்து கொண்டது. இந்தப் போட்டியில் கலந்து கொண்ட நமது மகளிர் திட்டப் படகிற்கு பரிசு வழங்கப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் இருந்து மாவட்ட திட்ட இயக்குநர் (பொ) திரு. எம். ஜான் சாமுவேல் அவர்கள் பரிசினைப் பெற்றுக் கொண்டார்.

வேலூர்

பணி ஆய்வுக் கூட்டம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்த மண்டல அளவிலான திட்ட இயக்குநர்கள் மற்றும் உதவித் திட்ட அலுவலர்களுக்கான பணி ஆய்வுக் கூட்டம் 05.06.2014 அன்று வேலூரில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க கூடுதல் முதன்மை செயல் அலுவலர் திரு. எல். ராஜா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் மாநில அலுவலகத் தின் துணை நிதி நிலை ஆலோசகர் திரு. ரவிசங்கர் மற்றும் மாநில அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இக்கலந்தாய்வில் வேலூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தருமபுரி, விழுப்புரம், காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் கடலூர் மாவட்ட திட்ட அலுவலர்கள் மற்றும் உதவி திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மதுரை

விற்பனைக் கண்காட்சி

மதுரையில் சித்திரைத் திருவிழாவினை முன்னிட்டு நடைபெற்ற அரசு பொருட்காட்சியில், மதுரை, தேனி, விருதுநகர், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சுய உதவிக் குழுவினர் தங்கள் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய 15 விற்பனை அரங்குகளை அமைத்திருந்தனர். சிறப்பாக அரங்கு அமைத்ததற்காக மதுரை மாவட்ட மகளிர் திட்டத் திற்கு வழங்கப்பட்ட பரிசினை, மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் இல. சுப்பிரமணியன், இ.ஆ.ப., அவர்களிடமிருந்து, இணை இயக்குநர் / திட்ட அலுவலர் திரு. அ. பாண்டியன் அவர்கள் பெற்றுக் கொண்டார். ■

கிருஷ்ணகிரி

புத்தகப் பராமரிப்பு பயிற்சி

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கிருஷ்ணகிரி மாவட்ட இயக்க மேலாண்மை அலகு சார்பில், காவேரிப்பட்டினம் ஒன்றியத்தைச் சேர்ந்த 12 கிராம வறுமை ஒழிப்பு சங்க நிர்வாகிகள் மற்றும் கணக்காளர்களுக்கு கிராம வறுமை ஒழிப்பு சங்க புத்தகப் பராமரிப்பு பயிற்சி 22.05.2014 மற்றும் 23.05.2014 ஆகிய இரண்டு நாட்கள் அளிக்கப்பட்டது. இப்பயிற்சியில் வறுமை ஒழிப்பு சங்க நிர்வாகிகள் மற்றும் கணக்காளர்கள் கலந்து கொண்டனர். ■

விருதுநகர்

1000 மரக் கன்றுகள் நடும் விழா

விருதுநகர் மாவட்டத்தில் சாத்தூர், வெம்பக் கோட்டை, வத்திராயிருப்பு மற்றும் நரிக்குடி ஆகிய ஒன்றியங்களில் உள்ள 165 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களிலும் மே 22 அன்று உலக தாவர உயிரின வள தினம் கொண்டாடப்பட்டது. இத்தினத்தில் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. செ. சண்முகராஜ், உதவித் திட்ட மேலாளர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், புதுவாழ்வு திட்டப் பணியாளர்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தினர் அனைத்து கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களிலும் 1000 மரக் கன்றுகளை நட்டனர்.

காஞ்சிபுரம்

உலக சுற்றுச்சூழல் தின விழா

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் ஊராட்சி, மாமண்டூர் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் சார்பில் நடைபெற்ற உலக சுற்றுச்சூழல் தின விழாவில், மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு பி. தனசேகர் தலைமையில் மரக்கன்று நடுதல் மற்றும் விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் புதுவாழ்வு திட்ட மாநில மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர் வல்லுநர் திரு பெஞ்சமின் விக்டர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். மேலும் இவ்விழாவில் உதவித் திட்ட மேலாளர்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்க உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

சென்னை

புதுவாழ்வு திட்டத்தின் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பு

சென்னையில் உள்ள மாநில புதுவாழ்வு திட்ட அலுவலகத்தில் உலகச் சுற்றுச்சூழல் தினம் 05.06.2014 அன்று விழிப்புணர்வு விழாவாகக் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, உறுதிமொழி, வினாடி வினா, ஆளுக்கு ஒரு மரம் நடுதல் மற்றும் எலக்ட்ரானிக் குப்பைகளைச் சேகரித்தல் போன்ற செயல்கள் மேற்கொள்ளப்பட்டன. சுமார் 50 மரக்கன்றுகள் புதுவாழ்வு திட்ட அலுவலர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன. மேலும் வீணாகும் எலெக்ட்ரானிக் குப்பைகளை மறுசுழற்சி செய்யும் வகையில் அதனைச் சேகரிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

மரக் கன்றுகள் நடுவது, நட்ட மரங்களைப் பேணி பாதுகாப்பது, தூய்மையான, வளமான தமிழகத்தை உருவாக்குவதிலும், புவி வெப்பமயமாவதைத் தடுத்து கடல் மட்டம் அதிகரிப்பதை குறைப்பதிலும், சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதிலும் புதுவாழ்வு திட்டத்தின் பசுமை பங்களிப்பு என்றென்றும் தொடரும்.

புதுக்கோட்டை

சர்வதேச பல்லுயிர் பெருக்க தின விழா

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஒன்றியத்திற்குட்பட்ட குடுமியான் மலை கிராமத்தில் வறுமை ஒழிப்புச் சங்கம் சார்பில் கொண்டாடப்பட்ட சர்வதேச பல்லுயிர் பெருக்க தின விழாவில் புதுக்கோட்டை மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திருமதி எஸ். வசுமதி, உதவித் திட்ட மேலாளர்கள், திட்டப் பணியாளர்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இத்தினத்தில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 155 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களின் சார்பில் 178 மரக்கன்றுகள் நடப்பட்டன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 03.06.2014 அன்று புதுடெல்லியிலுள்ள ராஷ்டிரபதி பவனில், மேதகு இந்திய குடியரசுத் தலைவர் திரு. பிரணாப் முகர்ஜி அவர்களை மரியாதை நிமித்தம் சந்தித்தார்கள்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 03.06.2014 அன்று புதுடெல்லியிலுள்ள பிரதமர் அலுவலகத்தில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களை சந்தித்து, தமிழகத்தின் வளர்ச்சித் திட்டங்கள் குறித்த கோரிக்கை மனுவை வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 11.06.2014 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் மூலம் Amma Salt என்ற பெயரில் தயாரிக்கப்பட்டுள்ள இரும்பு மற்றும் அயோடின் சத்துக்கள் கலந்த 'இரட்டை செறிவூட்டப்பட்ட உப்பு' (Double Fortified Salt), 'குறைந்த அளவு சோடியம் கொண்ட உப்பு' (Low Sodium Salt) மற்றும் 'சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த உப்பு' (Refined Free Flowe Iodized Salt) ஆகியவற்றின் விற்பனையைத் துவக்கி வைத்தார்கள்.

மணியக்கா

அறிமுகம்: மணியக்கா – மகளிருக்கு வங்கி, சேமிப்பு மற்றும் நலத்திட்டங்கள், சேவைகள் தொடர்பாக நல்ல கருத்துக்களும், ஆலோசனைகளும் வழங்கும் சுய உதவிக் குழு உறுப்பினர். சிறப்பாக தொழில் தொடங்கி, தவறாது கடன் திருப்பம் செய்யும் நம்பிக்கையான வங்கி வாடிக்கையாளர் இவர். வங்கி மேலாளராலும் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவராலும் பாராட்டப்பட்ட மணியக்காவை தற்போது சந்திப்போம்.



அட போங்க மணியக்கா... எங்களுக்கு என்ன பேங்குல லோனா தரப்போறாங்க. எங்களுக்கு எதுக்கு வங்கிக் கணக்கு?
நீங்க நினைக்கிற மாதிரி பணக்காரங்களுக்குதான் வங்கி சேவையின்னு இல்லை. பொது மக்கள் ஒவ்வொருத்தரும் தனி சேமிப்பு கணக்கு அவசியம் வங்கியில் தொடங்கி இருக்கணும்.
லோனுக்கு மட்டுமா வங்கி, நம்ம பணத்தை சேமிப்பதற்கும், தேவைப்பட்டால் வங்கியில் பணம் எடுத்து பயன்படுத்துவதற்கு வங்கிக் கணக்கு அவசியம் தெரியுமா?
அட... இது என்ன புதுக்கதையா இருக்கு?
அதெல்லாம் ஒன்றுமில்ல, நாம ஒவ்வொருத்தரும் வங்கியில கணக்கு துவங்குவதன் மூலம் ஒவ்வொருத்தரும் சேமிப்பு, கடன் வசதி போன்ற பல சேவைகளை வங்கிகளிடமிருந்து நேரடியா பெறலாம்.
அதெல்லாம் எல்லாம் சரி, நாங்க எப்படி வங்கிக்கு போயி வங்கிக் கணக்கு ஆரம்பிக்கிறது? அதுக்கு நாங்க என்ன செய்யணும்?
ஆமாம் மணியக்கா, நீங்க கேட்ட ஆவணங்களெல்லாம் எதுக்கு?
நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், நாளைக்கே உங்க போட்டோ, ரேசன் கார்டு, வாக்காளர் அட்டையோட வங்கிக்கு வந்துடுங்க. சரியா...நான் உங்களுக்கு வங்கிக் கணக்கு துவங்க வழிகாட்டுறேன்.
வங்கிக் கணக்கு துவங்கணும்முன்னா நம்மள பத்தின முழு தகவலும் வங்கிக்கு கொடுக்கணும். அதுக்குத்தான் இதெல்லாம்...
நீங்க சொன்னபடியே காலையில நாங்க எல்லாம் வங்கிக்கு வருகிறோம் மணியக்கா...

(தொடரும்)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 03.06.2014 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில், தாட்கோ மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு வாகனங்கள் வாங்கிட கடனுதவி, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான சுழல் நிதி, பொருளாதார மேம்பாட்டிற்கான கடனுதவி ஆகியவற்றை பயனாளிகளுக்கு வழங்கினார்கள்.

சென்னை தலைமைச் செயலகத்தில் 26.05.2014 அன்று, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு. எஸ்.பி.வேலுமணி அவர்கள் தலைமையில், மாநில அளவிலான வளர்ச்சிப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை முதன்மைச் செயலர் திரு. என்.எஸ். பழனியப்பன், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் திரு. பிரஜேந்திர நவ்நீத், இ.ஆ.ப., கூடுதல் இயக்குநர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க சென்னை அரசு பொது மருத்துவமனை வளாகத்தில் உள்ள அம்மா உணவகத்தில் 06.06.2014 அன்று மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள் மற்றும் வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு. சைதை துரைசாமி அவர்கள் ஆகியோர் அம்மா உணவகத்தில் வழங்கப்பட்ட உணவினை சாப்பிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

மகளிர் திட்ட செயல்பாடுகள் ஆய்வு

மகளிர் மேம்பாட்டிற்காக தமிழ்நாடு அரசு தீட்டி வரும் திட்டங்களை, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் ஊக்கத்துடன் செயல் படுத்தி வருகிறது. மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள், 28.05.2014 அன்று தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் ஆகியவற்றின் பணிகள் மற்றும் செயல்பாடுகளை விரிவாக ஆய்வு செய்தார்கள்.

இந்நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் அனைத்துப் பணிகளையும் தொய்வின்றி முடித்து, உரிய காலக்கெடுவிற்குள் பயனாளிகளுக்கான பலன்கள் சென்றடைய முனைப்புடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குறிப்பிட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மகளிர் திட்டம் மற்றும் வாழ்வாதார இயக்கம் போன்றவை மேலும் சிறப்பாக செயல்படத் தேவையான ஆலோசனைகளையும் வழங்கினார்கள்.

இந்த ஆய்வின் போது ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை முதன்மைச் செயலாளர் திரு. என். எஸ். பழனியப்பன், இ.ஆ.ப., அவர்கள், இணைச் செயலாளர் திரு. சமயமூர்த்தி, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம் பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் இயக்குநர்கள் முனைவர் ம. மனோகர சிங், திருமதி. எம். மாதவி, திரு. எல். ராஜா, திருமதி. ஆர். வி. ஷஜீவனா, திருமதி. சி. சுஜாதா ஜேக்கப், இணை இயக்குநர் திரு. அண்ணாமலை பிரேம்குமார், நிதி ஆலோசகர் திரு எஸ். கார்த்திகேயன், மாநில திட்ட மேலாளர் திரு டி. பாலசுப்ரமணியன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் அனைத்து மாவட்டங்களில் செயல்படும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள் மூலம் மகளிர் மேம்பாட்டிற்கான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. தற்போது தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் படிப்படியாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்படத் துவங்கியுள்ளது. மகளிர் திட்டம் மற்றும் வாழ்வாதார இயக்கம் ஆகியவற்றின் செயல்பாடுகளை ஆய்வு செய்து, மேலும் சிறப்பாக செயல்பட உரிய ஆலோசனைகள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

சிவகங்கை

சர்வதேச பல்லுயிர் பெருக்க தினம்

சர்வதேச பல்லுயிர் பெருக்க தினத்தை முன்னிட்டு சிவகங்கை மாவட்டத்தின் அனைத்து ஒன்றியங் களிலும் புதுவாழ்வு திட்டம் சார்பில் செயல்படும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் மூலம் 1100 மரங்கள் நடப்பட்டன. சிவகங்கை மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர், உதவித் திட்ட மேலாளர்கள், புதுவாழ்வு திட்ட பணியாளர்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் உறுப்பினர்கள், கூட்டமைப்புகளின் நிர்வாகிகள் மற்றும் மக்கள் அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு மரங்களை நட்டனர்.



நாமக்கல்

மழை நீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணி

நாமக்கல் மாவட்டம், பள்ளிப்பாளையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தட்டாங்குட்டை ஊராட்சியில் மழை நீர் சேகரிப்பின் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மூலம் 07.06.2014 அன்று மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது. இதில் ஊராட்சி மன்றத் தலைவர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், தட்டாங்குட்டை கூட்டமைப்பின் செயலர், உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

சுற்றுச்சூழல் மேலாண்மை கட்டமைப்பின் பசுமை அறிக்கை

ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச பல்லுயிர் பெருக்க தினம் மே 22, 2014 அன்று 'தி கிரீன் வேவ்' (The Green Wave) என்ற அமைப்புடன் இணைந்து மரம் நடும் விழாவாக புதுவாழ்வு திட்டத் தின் வழிகாட்டுதலின் கீழ் மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் கொண்டாடப்பட்டது.

புதுவாழ்வு திட்ட இயக்குநர் அவர்களின் ஆலோசனையின்படி 3199 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் சார்பில் 15,589 மரக்கன்றுகள் நடப்பட்டதுடன், 41,938 நபர்களுக்கு சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டது.

இந்த அரிய செயலை 'தி கிரீன் வேவ்' இணைய தளம் 2014 என்ற பகுதியில் உள்ள உலக வரைபடத்தில் காணலாம். மரம் நடுதலில் இந்தியா தன் பங்களிப்பை உலகிற்கு உணர்த்தியுள்ளது என்பது இதன் மூலம் அறிந்து கொள்ளலாம். புதுவாழ்வு திட்டத்தின் வழிகாட்டுதலுடன் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மூலம் மரங்கள் நடப்பட்ட விவரங்கள் மே, 22, இரவு 08.20 முதல் இணையதளத்தில் உள்ள படங்களில் தெளிவாகத் தெரிகிறது.

சேலம்

சமுதாயப் பணி

ஏற்காட்டில் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வண்ணம் புதுவாழ்வு திட்டத்தின் மூலமாக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஏற்காடு கோடை விழாவின்போது சுற்றுலாப் பயணி களிடமிருந்து பிளாஸ்டிக் பைகளைப் பெற்றுக் கொண்டு மாற்றுப் பைகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியை சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு மகரபூஷணம், இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்து, சுற்றுலாப் பயணிகளுக்கு மாற்றுப் பைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு க. மூர்த்தி, உதவித் திட்ட மேலாளர்கள், திட்ட பணியாளர்கள் மற்றும் சுய உதவிக் குழு பெண்கள் கலந்து கொண்டனர்.■

வேலூர்

கர்நாடக மாநில மகளிர் திட்ட மேலாண்மை இயக்குநர் வருகை

கர்நாடக மாநிலத்தின், மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் அவர்கள், இணை செயலர் மற்றும் திட்ட இயக்குநர்கள் ஆகியோர் கொண்ட குழுவினர், 05.06.2014 அன்று வேலூர் மாவட்டத்திற்கு வருகை தந்து மகளிர் திட்டத்தின் செயல்பாடுகளை பார்வையிட்டனர். அவர்களுக்கு வேலூர் மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் திருமதி ஜி. கே. லோகேஸ்வரி அவர்கள், சுய உதவிக் குழுவிற்காக செயல்படும் நுண்நிதி வங்கி மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் குறித்து விளக்கம் அளித்தார். கர்நாடக மாநில மகளிர் திட்ட குழுவினர் அணைக்கட்டு ஒன்றியம் செதுவாலை ஊராட்சிக்கு சென்று அங்குள்ள சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளைப் பார்வையிட்டு, குழுக்களின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடினர்.

மதுரை

மண்டல அளவிலான கலந்தாய்வுக் கூட்டம்

மதுரை மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில், மண்டல அளவிலான ஆய்வுக் கூட்டம், மதுரை பாண்டியன் ஹோட்டல் வளாகத்தில் 10.06.2014 அன்று நடைபெற்றது. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க கூடுதல் இயக்குநர் திரு எல். ராஜா அவர்கள் கலந்து கொண்டு, 2013–14ஆம் ஆண்டில் மேற் கொள்ளப்பட்ட பணிகள் மற்றும் 2014–15ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார். இக்கூட்டத்தில் மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை மற்றும் திருச்சி மாவட்டங்களின் மகளிர் திட்ட அலுவலர்கள் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

திருநெல்வேலி

கலந்தாய்வுக் கூட்டம்

திருநெல்வேலி, தூத்துக்குடி, இராமநாதபுரம், விருதுநகர், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களை சேர்ந்த திட்ட அலுவலர்கள் மற்றும் உதவித் திட்ட அலுவலர்களுக்கான கலந்தாய்வுக் கூட்டம் 11.06.2014 அன்று திருநெல்வேலி மாவட்டத்தில் நடைபெற்றது. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க கூடுதல் இயக்குநர் திரு எல். ராஜா, மற்றும் மேலாளர் திரு சீனிவாசராவ் ஆகியோர் கலந்து கொண்டு செயல்பாடுகளை மேம்படுத்தவும், குறிப்பிட்ட காலத்திற்குள் அடைய வேண்டிய இலக்குகள் குறித்தும் ஆலோசனைகள் தெரிவித்தார்கள். இக்கூட்டத்தில் திருநெல்வேலி, தூத்துக்குடி, இராமநாதபுரம், விருதுநகர், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களை சேர்ந்த மகளிர் திட்ட அலுவலர்கள் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

தேனி

பெருங்கடன் வழங்கும் விழா

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் தேனி மாவட்டம் பெரியகுளம் ஊராட்சி மற்றும் உத்தமபாளையம் ஊராட்சி ஒன்றியங்களில் அமைக்கப்பட்ட 30 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு தலா ரூ. 50 ஆயிரம் வீதம் ரூ. 15 இலட்சம் துவக்க நிதியாகவும், புலிக்குத்தி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு வங்கி பெருங்கடனாக 9.52 லட்சம் ரூபாயும் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் கே. எஸ். பழனிசாமி, இ.ஆ.ப., அவர்கள் 26.05.2014 அன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் திட்ட இயக்குநர் திருமதி. ஜா. உஷாதேவி, உதவித் திட்ட அலுவலர்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், கூட்டமைப்புகள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். துவக்க நிதியில் மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகள் குறித்து திட்ட இயக்குநர் அவர்கள் விரிவாக விளக்கிக் கூறினார். ■

வாழ்வாதாரத்தை வளமாக்கும் வங்கி சேவைகள்...!

கே. எம். திருநாவுக்கரசு,
முதுநிலை ஆலோசகர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

சென்ற இதழ்களில் நடப்பு கணக்கு (Current Account), வைப்புத் தொகை (Fixed Deposit), வங்கிகள் மூலம் நமக்குக் கிடைக்கும் வசதிகள் குறித்து பார்த்தோம். இந்த இதழில் வங்கிக் கணக்கின் பிற வசதிகள் மற்றும் வருமான வரி பிடித்தம் போன்றவை குறித்து பார்ப்போம்.

பிற வசதிகள்

வைப்புத் தொகை கணக்கில் மற்றொரு நபரை சேர்த்துக் கொள்ளவும் (Addition) அல்லது நீக்கி விடும் (Deletion) வசதி. இந்த வசதி சிறார் கணக்கிற்கு பொருந்தாது.

வைப்பு தொகையை கணக்கில் உள்ளவர்களின் தனித் தனிப் பெயரில் குறிப்பிட்ட தொகையை, வட்டி இழப்பு இல்லாமல் பிரித்துக் கொள்ள உதவும் வசதி.

ஒரு கிளையிலிருந்து அருகில் உள்ள அதே வங்கியின் மற்றொரு கிளைக்கு மாற்றிக் கொள்ளும் வசதி

வட்டியை அதே வங்கியின் மற்றொரு கிளையில் உள்ள கணக்கிற்கு (அ) மற்றொரு வங்கியில் உள்ள கணக்கில் வரவு வைக்க உதவும் வசதி

அவசர குறுகிய கால தேவைக்கு, வைப்புத் தொகை பத்திரத்தை ஈடாக செலுத்தி 90% வரை கடன் பெறும் வசதி, கடனுக்குரிய வட்டி வைப்புத் தொகையைக் காட்டிலும் அதிகபட்சமாக 1% வசூலிக்கப்படும்.

அவசர தேவைக்கு குறிப்பிட்ட காலம் முடிவடைவதற்கு முன்னரே, இடைப்பட்ட காலத்திற்குரிய வட்டியுடன், அபராத வட்டி இல்லாமல் (அ) அபராத வட்டியுடன் (1%) திரும்பப் பெறும் வசதி.

> வருமான வரி பிடிக்க வேண்டாம் என்ற வருமான வரி துறையிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழை சமர்ப்பித்தால், வங்கியில் பிடித்தம் செய்ய மாட்டார்கள்.

வைப்புத் தொகை முடிவுறும் தேதி, பொது விடுமுறை, வங்கி சேவை இல்லாத விடுமுறை நாளாக இருப்பின், அன்றைய நாளுக்கு முன் தினம் வரையில் உள்ள இடைப்பட்ட காலத் திற்கு வட்டி வழங்கப்படும்.

இது மாதாந்திர சேமிப்பு திட்டம் (Recuring Deposit) கூட்டு வட்டியுடன் கூடிய வைப்புத் தொகை திட்டம் (Reinvestment) ஆகியவைகளுக்கு, ஏற்கனவே குறிப்பிட்டு கொடுத்த தொகை விடுமுறை நாளாக இருப்பினும் வழங்கப்படும்.

வருமான வரி

ஒரு வங்கி கிளையில், ஒரு நபருக்கு ரூ. 10,000/–க்கு மேல் வட்டி வழங்கப்பட்டால், வருமானவரி துறை சட்டம் 194-A வின்படி வங்கி வருமான வரி பிடித்தம் (10%) செய்து, மத்திய அரசு வருமான வரி துறைக்கு அனுப்பி வைக்கப்படும். அதற்குரிய சான்றிதழ் F 16-A, வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும். அதை வாடிக்கையாளர், அந்த ஆண்டிற்கான பிற வருமானங்களுடன், வருமான வரி கணக்கில் தாக்கல் செய்ய வேண்டும். அதிகம் இருப்பின் வருமான வரித்துறை ஆய்வுக்குப் பின், அதிகமாக பிடித்தம் செய்த தொகையை திரும்பக் கொடுப்பார்கள்.

வருமான வரி சட்டம் 197-A விதியின்படி, வாடிக்கையாளர் கீழ்கண்ட வருமான துறையின் சான்றிதழை வங்கிக்கு சமர்ப்பித்தால், வங்கிகள் வட்டியில் வருமான வரி பிடித்தம் செய்ய மாட்டார்கள்.

தனி நபர்கள், தங்களுக்கு அந்த ஆண்டில் வேறு வருமானம் இல்லை என்ற உறுதிமொழியை Form-15G / Form-15H-ஐ என்ற இரண்டு படிவங்களை வங்கியிடம் சமர்ப்பித்தால், வரி பிடித்தம் செய்ய மாட்டார்கள்.

அடுத்த இதழில் மகளிருக்கான வங்கி கடன்கள் பற்றி பார்ப்போம்...

– வளரும்

மழைக்கால பாதுகாப்பு முறைகள்

மழையாலும், காற்றாலும் அறுந்து விழுந்த மேல்நிலை மின் கம்பிகள் அருகே செல்லக் கூடாது.

மின்கம்பத்திற்காகப் போடப்பட்டுள்ள ஸ்டே ஒயரின் மீதோ அல்லது மின் கம்பத்தில் கயிறு கட்டியோ துணிகளைக் காய வைக்கக் கூடாது. மின்கம்பத்திலோ அல்லது அதைத் தாங்கும் கம்பிகளிலோ கால்நடைகளைக் கட்டக் கூடாது.

மழை மற்றும் சூறாவளி புயல் காற்றின் போது பொதுமக்கள் கீழ்கண்ட பாதுகாப்பு வழிமுறைகளைப் கடைபிடிப்பதன் மூலம் மழையினால் ஏற்படும் துன்பத்தில் இருந்து விடுபடலாம்.

மழைக்காலத்தில் மின்மாற்றிகள் (டிரான்ஸ்பார்மர்), மின் கம்பங்கள், மின்பகிர்வு பெட்டிகள் மற்றும் மின்சார ஒயர்கள் போன்றவற்றின் அருகில் செல்லக் கூடாது.

மழையாலும், காற்றாலும் அறுந்து விழுந்த மேல்நிலை மின் கம்பிகள் அருகே செல்லக் கூடாது. எங்கேனும் மின் கம்பி அறுந்து விழுந்து கீழே கிடந்தால் உடனடியாக மின்வாரிய அலுவலகத்திற்கு தகவல் அளிக்க வேண்டும்.

மழைக்காலங்களில் தண்ணீர் தேங்கியுள்ள பகுதிகளை விட்டு அகல வேண்டும். இடி மின்னல் போன்றவை ஏற்படும் சமயத்தில் வெட்டவெளியில் நிற்க வேண்டாம். குடிசை வீடுகள், மரங்களின் அடியில், பஸ் நிழற்குடை போன்றவற்றில் தஞ்சமடைய வேண்டாம். கான்கிரீட் கூரையிலான பெரிய கட்டடங்கள், வீடுகள், பஸ்கள், கார், வேன் போன்றவற்றில் பாதுகாப்பாக தஞ்சமடைய வேண்டும்.

இடி, மின்னல் போன்றவை ஏற்படும் சமயத்தில் பாதுகாப்பாக தங்க இடம் இல்லையெனில், மின் கம்பிகள், மின் கம்பங்கள், உலோக கம்பி வேலி போன்றவை இல்லாத தாழ்வான பகுதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

மின்னல் மற்றும் இடி போன்றவை ஏற்படும் போது திறந்த நிலையில் உள்ள ஜன்னல்கள், கதவுகள் போன்றவற்றின் அருகில் இருக்கக் கூடாது. டி.வி., மிக்சி, கிரைண்டர், கணினி, தொலைபேசி போன்றவற்றை பயன்படுத்தக் கூடாது.

மின்கம்பத்திற்காகப் போடப்பட்டுள்ள ஸ்டே ஒயரின் மீதோ அல்லது மின் கம்பத்தில் கயிறு கட்டியோ துணிகளைக் காய வைக்கக் கூடாது. மின்கம்பத்திலோ அல்லது அதைத் தாங்கும் கம்பிகளிலோ கால்நடைகளைக் கட்டக் கூடாது.

மேற்கண்ட பாதுகாப்பு வழிமுறைகளை மழை மற்றும் சூறாவளி காற்று ஏற்படும் சமயத்தில் கையாண்டால், உயிர் மற்றும் உடமைகள் சேதத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ளலாம்.

(தொடரும்)

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

IFAD
Enabling poor rural people
to overcome poverty

மீனவர் வாழ்க்கைத் தரம் உயர்ந்திட இரு ஒப்பந்தங்கள்

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் விதமாக கடந்த 20.05.2014 அன்று முதன்மை செயலாளர் / திட்ட இயக்குநர் திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., மற்றும் தென்னிந்திய மீனவர் கூட்டமைப்புகளுடைய சம்மேளனத்தின் தலைவர் திரு. வி. பங்கிராஸ் மற்றும் திருவள்ளூர், நாகப்பட்டினம், கன்னியாகுமரி ஆகிய மூன்று மாவட்ட மீனவர் சங்கங்களின் கூட்டமைப்பு தலைவர்கள் ஆகியோர் முத்தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

திருவள்ளூர் மீனவர் சங்க கூட்டமைப்புக்கு ரூபாய் 9 இலட்சமும், நாகப்பட்டினம் மீனவர் சங்க கூட்டமைப்புக்கு ரூபாய் 50 இலட்சமும், மற்றும் கன்னியாகுமரி மீனவர் சங்க கூட்டமைப்புக்கு ரூபாய் 50 இலட்சமும் நடைமுறை மூலதன நிதி வழங்குவதற்காக இந்த ஒப்பந்தம் மேற் கொள்ளப்பட்டது. மேலும், 500 மீன் வணிக மகளிர் கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு (JLGs) ரூ. 375 இலட்சம் அளவிலான சிறுகடன் வழங்குவதற்கான ஒப்பந்தமும் கையெழுத்திடப்பட்டது.

மீனவர்கள் மற்றும் மீன் வணிகம் செய்யும் மிக ஏழை மகளிரின் வாழ்வாதாரத்தை மேம் படுத்தவும், அவர்களுக்கு குறைந்த வட்டியில் கடன் கிடைத்திடவும், அதன்மூலம் அவர்கள் பொருளாதார வளர்ச்சி பெறவும் இந்த முத்தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் வழிவகை செய்துள்ளது.

ஏழை எளிய மீனவ மகளிருக்கு சிறு வியாபாரக் கடன்கள் வழங்குவதற்கு ஏற்படுத்தப்பட்ட இந்தத் திட்டமானது, ஒரு புதுமையான முயற்சி என்று மத்திய அரசின் பொருளாதார விவகாரங்கள் துறை பாராட்டியுள்ளது.

ஏழை மீனவ மகளிருக்கு சிறு வியாபாரக் கடன் வழங்குவதற்கு ஏற்படுத்தப்பட்ட திட்டம், ஒரு புதுமையான முயற்சி என மத்திய அரசின் பொருளாதார விவகாரங்கள் துறை பாராட்டியுள்ளது.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

திரு. **விக்ரம் கபூர்,** இ.ஆ.ப., முதன்மைச் செயலாளர் / திட்ட இயக்குநர்

திரு. A. R. கிளாட்ஸ்டன் புஷ்பராஜ், கூடுதல் இயக்குநர்

திரு. இரா. இரவிச்சந்திரன், தகவல் மற்றும் தொழில் நுட்ப மேலாளர்

குறுந்தொழில் மூலம் உயர்ந்த மாற்றுத் திறனாளி

காஞ்சிபுரம் மாவட்டம், கோவளம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் கீழ் செயல்படும் கடல் அன்னை சுய உதவிக் குழுவில் உறுப்பினராக உள்ளவர் திருமதி. சாந்தி. (இவர் ஒரு விதவை, இவர் மகள் கணவரால் கைவிடப்பட்டவர்). இவரின் ஒரே மகன் சந்திரசேகர் (மாற்றுத் திறனாளி). இவர் ஒலி ஒளி நிறுவனத்தில் தினக்கூலி அடிப்படையில் வேலை பார்த்து வந்தார். அதன் மூலம் கிடைத்த குறைந்த வருமானத்தை கொண்டு குடும்பத்தை நடத்த மிகவும் சிரமப்பட்டார். கடந்த 15.04.2014ஆம் ஆண்டு மற்றொரு சுய உதவிக் குழு உறுப்பினராகிய திருமதி. அஞ்சலையுடன் இணைந்து சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத் தின் மூலம் ரூ. 2 இலட்சம் வட்டி இல்லாத குறுந்தொழில் கடன் பெற்று தன் மகன் சந்திரசேகர் உதவியுடன் திருமலை சவுண்ட் சர்வீஸ் என்ற ஒலி ஒளி நிறுவனத்தை ஆரம்பித்து வெற்றிகரமாக நடத்தி வருகிறார்.

சொந்தமாக தொழில் துவங்கி வருமானத்தை ஈட்டுவதற்கு உதவிய சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு பெரிதும் நன்றி தெரிவித்துக் கொள்கிறார்.

கடன் தொகையில் ரூ. 1,72,900/-த்தை திரும்ப செலுத்தி யது மட்டும் அல்லாது, இதுவரை ரூ. 40,000/- இலாபம் ஈட்டி உள்ளார். மேலும் எதிர்காலத்தில் ஜெனரேட்டர், டேபிள், சேர், மணவறை அலங்காரப் பொருட்கள் அமைத்தல் ஆகிய வசதிகளுடன் தொழிலை மேம்படுத்திட உள்ளதாக தெரிவிக்கிறார்.

ஒரு மாற்றுத் திறனாளியாக இருப்பினும் சொந்தமாக தொழில் துவங்கி வருமானத்தை ஈட்டி, அதன் மூலம் குடும்ப பொறுப்புகளை நிறைவாக நடத்துவதற்கு பெரிதும் உதவிய சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு மனமார நன்றி தெரிவிப்பதாக சந்திரசேகர் மகிழ்ச்சியுடன் கூறினார்.

கன்னியாகுமரியில்

செயற்கை பவளப் பாறைகள் ஒரு புதிய துவக்கம்

கன்னியாகுமரி மாவட்டத்தில் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோரப் பகுதிகளில் வாழும் மீனவ மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகிறது. மீன் வள மேம்பாடும், மீன் வள பாதுகாப்பும் அவற்றில் முதன்மையானவை ஆகும். மேற்கண்டவற்றை உறுதிப்படுத்திட செயற்கை பவளப் பாறைகள் தயாரித்து கடலுக்குள் அமைக்கப்பட்டு வருகின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் செயற்கை பவளப் பாறைகள் தயாரிக்கும் பணி நிறைவடைந்ததை தொடர்ந்து கடந்த 28.05.2014 அன்று மாவட்ட செயலாக்க அலுவலர் திருமதி. எஸ். உமா மகேஷ்வரி, கன்னியாகுமரி மாவட்ட மீனவர் சங்கங்களின் சம்மேளனத் தலைமை நிர்வாகி திரு. மரியதாஸ், மீன் விற்பனை சங்க தலைவர் மற்றும் சங்க உறுப்பினர்கள் முன்னிலையில் 200 செயற்கை பவளப் பாறைகள் வாவுதுறை கிராமத்தின் கடற்கரையில் இருந்து சுமார் 3 கடல் மைல் தூரத்தில் மத்திய கடல் மீன் வள ஆராய்ச்சி மையத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்ட இடத்தில் வெற்றிகரமாக நிறுவப்பட்டது.

இந்த செயற்கை பவளப் பாறைகளின் பயன்பாடு, ஆறு மாதத்திற்குப் பின், மத்திய கடல் சார் மீன் ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் ஆய்வு செய்யப்பட்டு, அரசுக்கு அறிக்கையாக சமர்ப்பிக்கப்படும்.

நாகப்பட்டினம் மா விவசாயிகளுக்கு மாம்பழகூழ் தயாரிக்கும் ஆலை நிறுவுவதற்கான முயற்சி

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தில் நாகப்பட்டினம் மாவட்டம், தலைஞாயிறு வட்டாரத்தில் உள்ள மா விவசாயிகளை ஒருங்கிணைத்து 50 உற்பத்தியாளர் குழுக்கள், CCD நிறுவனத்தின் மூலம் உருவாக்கப்பட்டன. அவர்களுக்கு இயற்கை உரம் தயாரிப்பது மற்றும் மா சாகுபடியை அதிகப்படுத்துவதற்கான உத்திகள் தொடர்பான பயிற்சிகள் அளிக்கப்பட்டு, அதன் மூலம் அதிக அளவில் சாகுபடியும் அடைந்துள்ளனர். உற்பத்தி செய்யப்பட்ட மாம்பழங்கள் கொள்முதல் செய்வதற்கான ஏற்பாடுகளும் திட்டத்தின் மூலம் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

அடுத்த கட்டமாக இங்கு உற்பத்தியாகும் மாம்பழங் களிலிருந்து மாம்பழக்கூழ் தயாரிக்கும் ஆலை நிறுவுவதற்கான ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏற்கனவே மதுரை மாவட்டம் நத்தத்தில் மாம்பழக் கூழ் தயாரிக்கும் ஆலை ஒன்று ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. அதே அடிப்படையில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள மா விவசாயிகளுக்காக ஒரு மாம்பழக் கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவுவதற்கான முயற்சி சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் உதவியுடன் மேற் கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கான அடிப்படை பணிகள் நடைபெற்று வருகின்றன.

உற்பத்தி செய்யப்பட்ட மாம்பழங்கள் கொள்முதல் செய்வதற்கான ஏற்பாடுகளும் திட்டத்தின் மூலம் மேற் கொள்ளப்பட்டுள்ளது. மா உற்பத்தியாளர் குழுக்களை ஒருங்கிணைக்க திருமறைக்காடு கடலோர மா விவசாயிகள் கூட்டமைப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ICICI வங்கி மூலம் நுண்கடன் ஏற்படுத்தல்

மகாராஷ்டிரா மாநிலத்தில் செயல்படும் தேஜஸ்வினி திட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள சுய உதவிக் குழுக்களுக்கான நுண்கடன் மாதிரியின் அடிப்படையில் நம் மாநிலத்தில் இந்த ஏற்பாடுகள் மேற் கொள்ளப்படும் என்று வங்கி அலுவலர்கள் தெரிவித்தனர்.

திருவள்ளூர் மாவட்டம் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் செயல்படும் பூங்குளம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் பிரளயம்பாக்கம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றில் உறுப்பினராக உள்ள அனைத்து சுய உதவிக் குழுக்களும் நுண்கடன் பெறும் வகையில் ஒரு கலந்தாய்வுக் கூட்டம் 30.05.2014 அன்று நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் ICICI வங்கியின் சுய உதவிக் குழு கடன் பிரிவின் மேலாளர் திரு ஸ்ரீ கிருஷ்ணன், மண்டல மேலாளர் திரு. ஜோனதான்,

கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு மேலாளர் திரு செந்தில் குமார், திருவள்ளூர் மாவட்ட செயலாக்க அலுவலர் திருமதி. விஜயலட்சுமி, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் ICICI வங்கியின் மூலம் நுண்கடன் மற்றும் சிறு தொழில்களுக்கு கடனுதவி பெறுவதற்கான தகுதி கொண்டுள்ளனரா என்பதை அறிந்திட அக்குழுக்களின் பதிவேடுகள் மற்றும் கணக்குகள் ஆய்வு செய்யப்பட்டன. மகாராஷ்டிரா மாநிலத்தில் செயல்படும் தேஜஸ்வினி திட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள சுய உதவிக் குழுக்களுக்கான நுண்கடன் மாதிரியின் அடிப்படையில் இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்படும் என்றும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், கடன் நிர்வாகத்தில் ஈடுபடுத்தப்பட்டு, அவர்களும் வருமானம் பெற வழிவகை செய்யப்படும் எனவும் வங்கி அலுவலர்கள் தெரிவித்தனர்.

மீன் விற்பனை செய்யும் ஏழை மகளிருக்கு குளிர் பதனப் பெட்டிகள்

விழுப்புரம் மாவட்டத்தில் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் செயல்பட்டுவரும் 8 கடலோர கிராமப் பகுதிகளில் தலையில் சுமந்து வீதி வீதியாக மீன் விற்பனை செய்யும் ஏழை மகளிருக்கு 26.05.2014 அன்று குளிர்பதனப் பெட்டிகள் (Ice Box) வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் விழுப்புரம் மாவட்ட செயலாக்க அலுவலர், தென்னிந்திய மீனவர் கூட்டமைப்புகளின் சம்மேளன (SIFFS) ஒருங்கிணைப்பாளர், பஞ்சாயத்து தலைவர்கள் மற்றும் பயனாளிகள் கலந்து கொண்டனர்.

குளிர்பதனப் பெட்டிகளைப் பெற்றுக் கொண்ட பயனாளிகளில் ஒருவர் கூறுகையில்

'இந்த குளிர் பதனப் பெட்டிகள், மாலை நேரங்களில் மீன்களை வாங்கி பாதுகாத்து, மறுநாள் விற்பதற்கு மிகவும் உதவிகர மாக இருக்கின்றன. இந்த குளிர்பதனப் பெட்டியில் பதப்படுத்தும் மீன்கள் 3 நாட்கள் வரை கெடாமல் இருக்கும். இதனால் நாங்கள் விற்கும் மீன்களின் தரம் குறையாமல் இருப்பதால், எங்களது வருவாய் அதிகரிக்கிறது. எங்கள் வாழ்வாதாரம் மேன்மேலும் நிலைத்த தன்மையுடையதாக மாறுகிறது' என்று குறிப்பிட்டார்.

திட்டப் பணிகளின்
செயல்பாடுகள் ஆய்வு

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள் 16.06.2014 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசு புதுவாழ்வு திட்டப் பணிகளின் செயல்பாடுகள், பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பிந்தைய வாழ்வாதாரத் திட்டம், சுனாமி மறுவாழ்வுத் திட்டங்கள் குறித்து திட்டப் பணிகளின் செயல்பாடுகளை விரிவாக ஆய்வு செய்தார்கள். கிராமப்புற மக்களிடையே நிலவும் வறுமையை ஒழித்தல், கடலோர மற்றும் மிகவும் பின்தங்கிய வட்டாரங்களில் வசிக்கும் மக்களின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தல் போன்றவைகளுக்கான திட்டங்கள் முழுமை யாக மக்களுக்கு சென்றடையும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருவதாக கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், செயல்படுத்தப்பட்டு வரும் அனைத்து செயல்பாடுகளையும் மக்கள் பங்கேற்புடன் துரிதமாக செய்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டதுடன், மேலும் சிறப்பாக செயல்பட பல்வேறு ஆலோசனைகளையும் வழங்கினார்.

இக்கூட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலர் திரு என். எஸ். பழனியப்பன், இ.ஆ.ப., இணைச் செயலர் திரு. சமயமூர்த்தி, இ.ஆ.ப., சுனாமி திட்ட இயக்குநர் செல்வி. அபூர்வா, இ.ஆ.ப., மாநில புதுவாழ்வு திட்ட இயக்குநர் திருமதி. மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப., மற்றும் பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத் தின் உதவியுடன் கூடிய சுனாமிக்கு பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்ட கூடுதல் இயக்குநர் திரு. கிளாட்ஸ்டன் புஷ்பராஜ், புதுவாழ்வு திட்ட கூடுதல் இயக்குநர்கள் திருமதி. ஆர். வி. ஷஜீவனா, திருமதி. சி. சுஜாதா ஜேக்கப் மற்றும் பல்வேறு மாவட்ட திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

www.tamilnadumahalir.org/mutram

சுய உதவிக் குழுவினைச் சேர்ந்த சுபா, செல்லாயி, பார்வதி மற்றும் வாணி ஆகியோர் மக்கள் நிலை ஆய்வு குறித்து விவாதிக்கிறார்கள்.

சுபா : எல்லோருக்கும் வணக்கம். இன்னைக்கு மக்கள் நிலை ஆய்வு பத்தி விவாதிக்கலாம்.

செல்லாயி : மக்கள் நிலை ஆய்வுன்னா என்ன?

சுபா: மக்கள் வாழ்க்கை நிலையினை பங்கேற்பு முறையில் அறிந்து கொண்டு, கிராம மக்களே ஒன்று சேர்ந்து அவர்களின் பொருளாதார நிலை அடிப்படையில் மக்களை வரிசைப்படுத்துவதுதான் 'மக்கள் நிலை ஆய்வு'

செல்லாயி: மக்கள் நிலை ஆய்வின் அவசியம் என்ன?

சுபா: ஏழை மக்களை கண்டறிந்து, வறுமையின் காரணங்களை அறிந்து தேவையான உதவிகள் செய்தால்தான் வாழ்வாதார இயக்கத்தின் நோக்கம் வெற்றி பெறும். இதற்கு மக்கள் நிலை ஆய்வு அவசியம்.

செல்லாயி: மக்கள் நிலை ஆய்வின் நன்மைகள் என்ன?

சுபா: கண்டறியப்பட்ட ஏழை மக்களை வைத்து மக்கள் அமைப்புகளான கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், சுய உதவிக் குழுக்கள், கூட்டமைப்புகள், இளைஞர் குழுக்கள், ஒத்த தொழில் குழுக்கள் போன்ற அமைப்புகளை உருவாக்கி அவர்களே வழிநடத்த மக்கள் நிலை ஆய்வு உதவுகிறது.

செல்லாயி: இது மட்டும்தானா?

சுபா: ஏழைகள், மிகவும் ஏழைகள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர்கள் போன்றவர்கள் பட்டியலை கிராம சபையில் அங்கீகாரம் பெறவும், இயக்க நிதியை தகுதியானவர்களுக்கு வழங்கவும், விடுபட்ட ஏழை மக்களை கண்டறியவும் மக்கள் நிலை ஆய்வு உதவுகிறது.

வாணி: மக்கள் நிலை ஆய்வின் போது பின்பற்ற வேண்டியது எவைகள்?

சுபா: மக்களுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ளுதல், மக்கள் நிலை ஆய்வுக் குழுவை அமைத்தல், செய்தித் தொடர்பு முகாமினை நடத்துதல், இரண்டாம் நிலை தகவல்களை சேகரித்தல், ஊரினை சுற்றிப் பார்த்து அறிதல், பொருளாதார நிலை மதிப்பீடு செய்தல்.

பார்வதி: மக்கள் நிலை ஆய்வுக் குழுவை எப்படி தேர்ந்தெடுப்பாங்க?

சுபா: குடியிருப்புக் கூட்டத்தை நடத்திதான் மக்கள் நிலை ஆய்வுக் குழுவினை தேர்வு செய்ய வேண்டும்.

வாணி: குழுவின் உறுப்பினருக்கு என்ன தகுதிகள் தேவை?

சுபா: எழுதப் படிக்கத் தெரிந்தவராகவும், பொது சேவைகள் செய்வதில் அக்கறை கொண்டவராகவும், சுய உதவிக் குழு உறுப்பினராகவும், அனைத்து தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக் கூடியவராகவும், கிராமத்தைப் பற்றி முழுமையா அறிந்தவராகவும், தன்னலம் இல்லாதவராகவும் இருக்க வேணும்.

வாணி: மக்கள் நிலை ஆய்வுக் குழுவினருக்கு பயிற்சிகள் உண்டா?

சுபா: மக்கள் நிலை ஆய்வுக் குழுவினருக்கு 1 நாள் வகுப்பறை பயிற்சி யும், 1 நாள் களப் பயிற்சியும் அளிக்கப்படும். பயிற்சியில் ஏற்படும் சந்தேகங்களுக்கு பயிற்றுநர்கள் தக்க பதில் அளிப்பார்கள்.

செல்லாயி: மக்கள் நிலை ஆய்வு பற்றி சொன்னதற்கு ரொம்ப நன்றி.

(சுபா விடைபெற்று செல்ல... செல்லாயி, வாணி மற்றும் பார்வதி ஆகியோர் வீட்டிற்கு செல்கின்றனர்.)

(தொடரும்)

முற்றக் கச்சேரி

மக்கள் நிலை ஆய்வு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

புது வாழ்வு திட்டம்

மாவட்ட ஆட்சியர் அவர்களை கூடுதல் திட்ட இயக்குநர் அவர்கள் சந்தித்து திட்டம் செயல்படுத்தும் பகுதிகளில் இ.கவர்னன்ஸ் செயல்படுத்துவது பற்றியும் IOB வங்கி மண்டல பொது மேலாளரிடம் குழுக்களுக்கு வங்கிக் கடன்... பக்கம்...32

மழைப் பொழிவிற்கு முன்னும் பின்னும் மழை நீரை சேகரிக்க பயன்படும் மேற்தளம், தொட்டி, பைப்புகள், வடிகட்டிகள் போன்றவற்றை முறையாக சுத்தம் செய்ய வேண்டும். மாசடைந்த நீரையோ அல்லது கழிவு நீரையோ நிலத்தடி நீரை சேமிக்கப் பயன்படுத்தக் கூடாது. பக்கம்...34

புதுவாழ்வு திட்டத்தின் செயல் பாடுகளை பார்வையிட களப்பயண மாக வருகை தந்த ஜம்மு காஷ்மீர் மாநில ஊரக வாழ்வாதார இயக்க குழுவினர் தமிழகத்தில் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகள் சிறப்பாக இருப்பதாகப் பாராட்டிச் சென்றனர். பக்கம்...36

கூடுதல் திட்ட இயக்குரின் ஆய்வு

விருதுநகர் மாவட்டம் கே.மேட்டுப்பட்டி மற்றும் அம்மாப்பட்டி ஊராட்சிகளில் செயல்படும் கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் மற்றும் கூட்டமைப்புகளின் செயல்பாடுகளை ஆய்வு செய்த கூடுதல் திட்ட இயக்குநர் திருமதி ஆர். வி. ஷஜீவனா அவர்கள், பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்கள். பின்னர் மாவட்ட ஆட்சியரக வளர்ச்சி மன்ற கூட்டரங்கில் நடைபெற்ற புதுவாழ்வுத் திட்ட பணியாளர்களுக்கான ஆய்வுக் கூட்டத்தில், மாவட்ட ஆட்சியர் அவர்களை கூடுதல் திட்ட இயக்குநர் அவர்கள் சந்தித்து திட்டம் செயல்படுத்தும் பகுதிகளில் இ.கவர்னன்ஸ் செயல்படுத்துவது பற்றியும் IOB வங்கி மண்டல பொது மேலாளரிடம் குழுக்களுக்கு வங்கி கடன் கொடுப்பது குறித்தும் கலந்துரையாடல் செய்தார்கள். இந்த ஆய்வின் போது புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு சண்முகராஜ் மற்றும் உதவித் திட்ட மேலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நம் மாநிலத்தில் புதுவாழ்வு திட்டம் செயல்படும் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் கூட்டமைப்புகளின் செயல்பாடுகளை ஆய்வு செய்து, அவைகள் மேலும் சிறப்பாக செயல்பட பல்வேறு ஆலோசனைகளை வழங்குவதன் மூலம் புதுவாழ்வு திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு பல்வேறு தரப்பினரின் பாராட்டுகளையும் பெற்று வருகிறது.

கைத்தொழில் கற்றுக் கொள்ள வாங்க...

காஞ்சிபுரம் மாவட்ட புதுவாழ்வு திட்டமும், L&T நிறுவனமும் இணைந்து 22.05.2014 அன்று பழமத்தூர் மகமை அலுவலகத்தில் நடத்திய வேலை வாய்ப்பு முகாமில், மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. பி. தனசேகர் மற்றும் L&T நிறுவனத்தின் பயிற்சி மேலாளர் ஆகியோர் கலந்து கொண்டு வேலைவாய்ப்பு முகாம் குறித்து பல்வேறு விபரங்களை எடுத்துரைத்தனர். இம்முகாமில் தேர்வு செய்யப்பட்ட 50 நபர்களுக்கு 23.05.2014 முதல் L&T நிறுவனத்தில் மின்காப்பாளர், கம்பியாளர், கொத்தனார், குழாய் பொருத்துநர் ஆகிய தொழில்களில் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. ■

உயர்ந்த வாழ்க்கைத் தரம்

விருதுநகர் மாவட்டம், சாத்தூர், வெங்கடாசலபுரம் ஊராட்சியில் வசித்து வரும் தமயந்தி ஒரு மாற்றுத் திறனாளி. ஹோமியோபதி மருத்துவ படிப்பு படித்துள்ள இவர், ஹோமியோபதி மருந்துகள் விற்பனை செய்யும் கடையினை வைக்க இவர் நினைத்தார். ஆனால் அதற்கான மூலதனம் இல்லாமல் அவரின் எண்ணம் நிறைவேறவில்லை. இந்நிலையில் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தில் இணைந்ததின் மூலம் 20 ஆயிரம் ரூபாய் தனிநபர் கடனாகப் பெற்று, அதை மூலதனமாகக் கொண்டு, தற்போது வீட்டிலேயே ஹோமியோபதி மருந்துகளை விற்பனை செய்யும் கடை வைத்து தற்போது கணிசமான வருவாய் பெற்று வருகிறார். ■

சமூக வல்லுனர்களுக்கு இந்தி மொழி பயிற்சி

தமிழ்நாடு அரசு ஊரக வளர்ச்சித் துறையின் கீழ் செயல்பட்டு வரும் புதுவாழ்வு திட்ட மாவட்ட மகமையின் சமூக வல்லுனர்களுக்கு இந்தி மொழி கற்பிக்கும் பயிற்சியின் துவக்க விழா 28.05.2014 அன்று வேலூர் மாவட்டம் மாதனூர் மகமை அலுவலகத்தில் நடைபெற்றது. மாவட்ட திட்ட மேலாளர் திரு எஸ். நாராயணன் அவர்கள் குத்து பயிற்சியை துவக்கி வைத்தார். இந்த விழாவில் Third Edge பிற மொழி கற்பிக்கும் நிறுவனத்தின் ஒருங்கிணைப்பாளர் திரு. ராமதுரை, இந்தி மொழி பயிற்சியாளர்கள் திருமதி. மீனா மற்றும் திருமதி. லட்சுமி ஆகியோர் பயிற்சி அளித்தனர். இதில் 35 சமூக வல்லுனர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர். இரண்டு மாதங்களில் இந்தியில் பேசவும், எழுதவும் சமூக வல்லுனர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படும்.

பேச முடியாவிட்டாலும் காசு ஈட்ட முடியும்!

கிருஷ்ணகிரி மாவட்டம், மேட்டுத்தாங்கல் கிராமத்தில் வசிக்கும், திருநாவுக்கரசு காது கேட்காத, வாய் பேச முடியாத மாற்றுத் திறனாளி. வறுமையில் வாழ்ந்து வந்த இவருக்கு கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் தையல் தொழில் செய்ய ரூ. 12,000/– கடன் கொடுத்தது. சேமிப்புத் தொகையான ரூ. 8,000/– சேர்த்து, ரூ. 20,000/– மூலதனத்தில், தனது நண்பர் ஒருவரை பங்குதாரராக சேர்த்து, ஊத்தங்கரையில் தையல் கடை ஒன்றை துவங்கிய திருநாவுக்கரசு, தற்போது மாதந்தோறும் தனக்கு ரூ. 7,000/– வரை வருவாய் கிடைப்பதாக மகிழ்ச்சியுடன் கூறுகிறார்.

ஏழை பெண்ணின் சாதனை

தருமபுரி மாவட்டம், இண்டூர் அருகே உள்ள பேடறஅள்ளி ஊராட்சியைச் சேர்ந்த சோளப்பாடி கிராமத்தைச் சேர்ந்த பரிமளாவுக்கு 14 வயதிலேயே திருமணம் ஆகி விட்டது. திருமணம் நடந்த ஒரு வருடத்திலேயே இவருக்கு காது கேட்காத வாய் பேச முடியாத ஆண் குழந்தை ஒன்றும் பிறந்தது. சில வருடங்களிலேயே இவரது கணவர் இவரைவிட்டு பிரிந்து சென்று விட்டார். கூலி வேலைக்குச் சென்று அதன் மூலம் கிடைக்கும் வருவாயில் மிகவும் சிரமத்துடன் வாழ்ந்து வந்தார் பரிமளா. புதுவாழ்வு திட்டம் மூலம் பரிமளாவுக்கு தையல் பயிற்சியும், கறவை மாடு வாங்க நிதி உதவியும் வழங்கப்பட்டது. தையல் பயிற்சி பெற்ற பரிமளா தற்போது துணிகளைத் தைத்துக் கொடுத்தும், பால் வியாபாரம் செய்தும் மாதம் ரூ. 7,000/– வரை வருவாய் பெற்று வருகிறார்.

வறுமையைப் போக்கிய திட்டம்

கரூர் மாவட்டம், வீரணம்பட்டியில் வசித்து வரும் தேவேந்திரன், புதுவாழ்வு திட்டம் பற்றி கூறும்போது, 'நான் வேலை செய்து வந்த டெக்ஸ்டைல்ஸ் மில்லை நஷ்டம் காரணமாக மூடிவிட்டார்கள். 10ஆம் வகுப்பு கூட தேர்ச்சி பெறாத நான் வேலை கிடைக்காமல் மிகவும் சிரமப்பட்டேன். கைத்தொழில் எதுவும் எனக்கு தெரியாது. யாரும் எனக்கு எந்தவித உதவியும் செய்ய முன்வரவில்லை. இந்நிலையில் எங்களது ஊரில் செயல்பட்டு வந்த கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கு சென்று, என்னுடைய நிலையைப் பற்றி கூறி எனக்கு உதவும்படி கேட்டுக் கொண்டேன். நான் இலக்கு மக்கள் பட்டியலில் இருப்பதால் எனக்கு ஓட்டுநர் பயிற்சி வழங்கப்பட்டது. பயிற்சிக்குப் பின்னர் தற்போது ஓட்டுநராகப் பணியாற்றுவதன் மூலம் மாதம் ரூ. 9,500/– ஊதியமாக பெற்று வருகிறேன்' என்று மகிழ்ச்சியுடன் கூறுகிறார்.

ஏழை எளியவர்களுக்கும், மாற்றுத் திறனாளிகளுக்கும் தன்னம்பிக்கை ஏற்படுத்தி, அவர்களின் வாழ்வில் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக புதுவாழ்வு திட்டமும், கிராம வறுமை ஒழிப்புச் சங்கமும் செயல்பட்டு வருகின்றன.

புதுவாழ்வு தந்த புகழ் வாழ்வு

தர்மபுரி மாவட்டம், நல்லம் பள்ளி ஒன்றியம், தடங்கம் ஊராட்சியில் வசிப்பவர் சுமதி (வயது 29), போலியோ நோய் தாக்கியதால் இரண்டு கால்களும் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளியான இவர் பி.ஏ., வரை படித்துள்ளார். புதுவாழ்வு திட்டத்தின் சமூக தணிக்கைக் குழுவில் உறுப்பினராகவும் உள்ளார்.

இவரின் தந்தையார் விவசாயம் செய்து வருகிறார். போதிய வருமானம் இல்லாமலும், படிப்புக்கேற்ற வேலை கிடைக்காததாலும் மிகவும் சிரமப்பட்டு வந்த சுமதி, புதுவாழ்வு திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படும் இளைஞர் தொழில் திறன் பயிற்சித் திட்டத்தின் மூலம் அழகுக்கலை பயிற்சி பெற விண்ணப்பித்தார். சுமதியின் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவருக்கு அழகுக் கலை பயிற்சி வழங்கப்பட்டது.

பயிற்சிக்குப் பின்னர் வீட்டிலேயே அழகு நிலையம் அமைத்து பேசியல், முடி சரி செய்தல், மெகந்தி போடுதல், மணப்பெண் அழகுபடுத்துதல் போன்றவற்றை செய்து வரும் சுமதி, தற்போது மாதம் ரூ. 8,000/– வரை வருவாய் பெற்று வருகிறார். வீட்டிற்கு பாரமாக இருந்த தனக்கு தன்னம்பிக்கையை ஏற்படுத்தி தந்தது புதுவாழ்வு திட்டம் என்கிறார் சுமதி.

மழை நீர் சேகரிப்பை மேம்படுத்த தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள திட்டங்கள்

மழை நீர் சேகரிப்பு

ஒவ்வொரு மழைத்துளியும் மகத்தானது!

நம் வருங்கால சந்ததியினர் குடிப்பதற்கும், பாசனத்திற்கும் நீரின்றி கடும் விளைவுகளை கூடிய விரைவிலேயே சந்திக்க நேரிடும். எனவே மழை நீரை சேமிக்க வேண்டியது நம் அனைவரின் கடமை யாகும். மழை நீர் சேகரிப்பு என்பது கொட்டும் மழைத் துளிகளை வீணாக்காமல் பிடித்து வைப்பதே ஆகும். மழை நீரை தொட்டியில் சேமிக்கலாம். அல்லது நிலத்தடி நீரைப் புத்துயிர்ப்பூட்டலாம்.

மழை நீர் சேகரிப்பின் போது செய்யக் கூடாதவை

மேற்தளத்தை கழிவிடமாகவோ அல்லது செல்லப் பிராணிகளின் கழிவிடமாகவோ பயன்படுத்தக் கூடாது.

மாசடைந்த நீரையோ அல்லது கழிவு நீரையோ நிலத்தடி நீரை சேமிக்கப் பயன்படுத்தக் கூடாது.

கோடை காலம் முடிந்த பிறகு அல்லது முதல் மழை பொழிவதற்கு முன் மழை நீர் சேகரிப்புத் தொட்டியைக் கழுவி, கசடுகளை அகற்ற வேண்டும்.

செய்யக் கூடியவை

நிலத்தடி நீரை சேமிக்க மழை நீரை மட்டுமே பயன்படுத்த வேண்டும். நிலத்தடி நீரை சேமிக்கும் முன் வடிகட்டிகள் அமைக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

மழைக் காலத்தில் ஒவ்வொரு மழைப் பொழிவிற்கு முன்னும் பின்னும் மழை நீரை சேகரிக்க பயன்படும் மேற் தளம், தொட்டி, பைப்புகள், வடிகட்டிகள் போன்றவற்றை முறையாக சுத்தம் செய்ய வேண்டும்.

மழை நீர் சேகரிப்பை மேம்படுத்த அரசின் திட்டங்கள்

மழை நீர் சேகரிப்பு மற்றும் நீர் மேலாண்மைத் திட்டம், வேளாண் பொறியியல் துறை மூலமாக செயல்படுத்தப்படும்.

உதவி வழங்கப்படும் வேலைகளின் விவரங்கள்	திட்டத்தில் பயனடைய தகுதி உள்ளவர்கள்	மானியம்	தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்
குளங்கள் வெட்ட, சிறிய, நடுத்தர, பெரிய தடுப்பணைகள் கட்ட, பண்ணைக் குட்டைகள் அமைக்க, பயன்படுத்தாத கிணறுகள், கிராம ஏரிகள், ஊரணிகள் தூர் வாருவதற்கு	தேர்ந்தெடுக்கப்பட்ட நீர் நிலைகளுக்கு, அந்தந்த மாவட்டத்திலுள்ள அனைத்து விவசாயிகளும்	பயனாளிகள், பொது நிலத்தை பராமரிப்பதற்கு 10% பங்களிப்பை தொகையாக கிராம மேம்பாட்டுக் கழகம் / நீர் பிடிப்பு சங்கம் என்ற கூட்டுக் கணக்கில் செலுத்த வேண்டும். பயனாளி பட்டியல் / பழங்குடி இனத்தவராயின் 5% பொருந்தும்.	அந்தந்த மாவட்டத்தின் நிர்வாக பொறியாளர் (AE) வேளாண் பொறியியல் துறை

நபார்டு உதவும் மழை நீர் சேகரிப்புத் திட்டம்

உதவி வழங்கப்படும் வேலைகளின் விவரங்கள்	திட்டத்தில் பயனடைய தகுதி உள்ளவர்கள்	மானியம்	தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்
குளங்கள் வெட்ட, சிறிய, நடுத்தர, பெரிய தடுப்பணைகள் கட்ட, பண்ணைக் குட்டைகள் அமைக்க, பயன்படுத்தாத கிணறுகள், கிராம ஏரிகள், ஊரணிகள் தூர் வாருவதற்கு	காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், கடலூர், வேலூர், சேலம், ஈரோடு, நாமக்கல், திருச்சி, பெரம்பலூர், கரூர், திண்டுக்கல், தேனி, ராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், தூத்துக்குடி, கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில் உள்ளவர்கள்	பொது நில மேம்பாட்டிற்கு 100% மானியமும், பட்டா நிலங்களுக்கு 75% மானியமும் வழங்கப்படுகிறது. மீதி 25% பயனாளிகளிடம் வசூலிக்கப்படும்.	அந்தந்த மாவட்டத்தின் நிர்வாக பொறியாளர் (AE) வேளாண் பொறியியல் துறை

மேலும் விபரங்களுக்கு கீழ்கண்ட இணையதளங்களைப் பார்க்கவும்
http://www.mppcb.nic.in/RWH.htm
http://dolr.nic.in/dolr.downloads/spsp/TAMILNADU%20STATE%20PERSPECTIVE%20&%20STRATEGIC%20PLAN.pdf
http://www.rainwaterharvesting.org/Urban/Components.htm
http://www.chennaimetrowater.tn.nic.in/departments/rwh/methods.htm
http://www.chennaimetrowater.tn.nic.in/campaign/rwhanimation.htm
http://www.dhan.org/farmponds/farmpond_def.php
http://www.agritech.tnau.ac.in/agricultural_engineering/agriengg_govt_schemes.html

புதுவாழ்வு திட்டத்திற்கு

உலக வங்கிக் குழுவினரின் பாராட்டு!

ஏழை மக்களின் வாழ்வில் பொருளாதார வளத்தை புதுவாழ்வு திட்டம் ஏற்படுத்தி உள்ளது.

தமிழக அரசின் புதுவாழ்வு திட்டம் உலக வங்கியின் நிதி உதவியோடு வறுமையை ஒழித்து மக்களை ஆற்றல்படுத்தும் திட்டமாகும். இத்திட்டமானது தமிழகத்தில் 26 மாவட்டங்களில் உள்ள 120 பிற்படுத்தப்பட்ட வட்டாரங்களில் 4174 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ரூபாய் 1667 கோடியில் செயல்படுத்தும் இத்திட்டம் தமிழகத்தில் 9.6 இலட்சம் ஏழை குடும்பங்களை பயனடையச் செய்து வருகிறது.

உலக வங்கியின் இயக்குநர் திரு. ஒனோ ரூல் மற்றும் திருமதி. சோபா ஷெட்டி, திரு. சமிக் தாஸ், திருமதி. நேத்ரா ஆகியோர் கொண்ட குழுவினர் காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு வருகை தந்து புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகளை ஆய்வு செய்தனர். இக்குழுவினருடன் மாநில புதுவாழ்வு திட்ட இயக்குநர் திருமதி. மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப., கூடுதல் திட்ட இயக்குநர்கள் திருமதி. ஆர். வி. ஷஜீவனா மற்றும் திருமதி. சி. சுஜாதா ஜேக்கப், மாநில வல்லுநர் மற்றும் திட்டப் பணியாளர்களும் உடன் சென்றனர்.

உலக வங்கிக் குழுவினர் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள அன்னாத்தூர் ஊராட்சிக்கு வருகை தந்து, அந்த ஊராட்சியில் செயல்படும் சமூக அமைப்புகளான கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், சுய உதவிக் குழுக்கள் மற்றும் சமுதாய சுய உதவிக் குழு பயிற்றுனர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோரிடம் புதுவாழ்வு திட்டம் குறித்து ஆய்வு நடத்தினர்.

புதுவாழ்வு திட்டத்தில் மக்களின் பங்கேற்பு, திட்ட செயல்பாடுகள், சமூக அமைப்புகளின் கணக்கு பராமரிப்பு, இணையதள தகவல் மேலாண்மை, தொழிற்பயிற்சிகள், ஒத்த தொழில் குழுக்களின் செயல்பாடுகள், மேற்கொண்டுள்ள தொழில்கள், இளைஞர் திறன் வளர்ப்பு பயிற்சிகள், மக்கள் கற்றல் மையம், டேலி கணக்குப் பராமரிப்பு

ரூபாய் 1667 கோடியில் செயல்படுத்தும் புதுவாழ்வுத் திட்டத்தால் தமிழகத்தில் 9.6 இலட்சம் ஏழை குடும்பங்கள் பயனடைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

ஆகியவற்றை பார்வையிட்ட உலக வங்கிக் குழுவினர், தமிழகத்தில் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகள் மிகவும் சிறப்பாக உள்ளதாகப் பாராட்டினர்.

பின்னர் உலக வங்கிக் குழுவினர் இளைஞர் தொழிற்திறன் பயிற்சி திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டு, இன்டிமேட் பேஷன் ஆயத்த ஆடை நிறுவனத்தில் ஆயத்த ஆடை பயிற்சியையும், லார்சன் மற்றும் டியூப்ரோ (L&T) நிறுவனத்தில் கொத்தனார், கம்பி கட்டுதல் மற்றும் வெல்டிங் ஆகிய பயிற்சிகளையும் பெற்று வரும் இளைஞர்களை சந்தித்து, புதுவாழ்வு திட்டத்தின் மூலம் கிடைக்கப் பெற்ற பயன்கள் பற்றியும், தொழில் நிறுவனங்களில் வழங்கப்படும் தொழிற்பயிற்சிகள் மற்றும் வேலை வாய்ப்புகளைப் பற்றியும் கேட்டறிந்தனர்.

புதுவாழ்வு திட்டம் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் ஆகியவை கிராமப்புறங்களில் மேற்கொண்டு வரும் பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக ஏழ்மை நிலையிலிருந்து மக்கள் விடுபட்டு வருகின்றனர் என்பதுடன், தொழில் முனைவோர்களாகவும் உருவாகி வருகின்றனர் என்பதை அறிந்த உலக வங்கிக் குழுவினர் புதுவாழ்வு திட்டம் மேலும் சிறப்பாக செயல்பட ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளையும் வழங்கினர்.

புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகளை பார்வையிட பிற மாநிலத்தவரும் வருகின்றனர்.

வேலூர் மாவட்டத்தில்

ஜம்மு காஷ்மீர் அணியினரின் களப்பயணம்...

வேலூர் மாவட்டம், மோடிகுப்பம் மற்றும் வளையாம்பட்டு ஆகிய ஊராட்சிகளுக்கு வருகை தந்த இக்குழுவினர் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், சமூக தணிக்கைக் குழு, இலக்கு மக்களை கண்டறிதல், மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோருக்கு வழங்கப்படும் வாழ்வாதார உதவிகள் மற்றும் மருத்துவ உதவிகள், இளைஞர் தொழிற்திறன் பயிற்சிகள் போன்றவை குறித்து ஆய்வு செய்தனர்.

தமிழகத்தில் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகளைப் பார்வையிட ஜம்மு காஷ்மீர் மாநில ஊரக வாழ்வாதார திட்ட இயக்குநர் திரு. மாணிக்கராஜ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ஒரு குழுவினர் 23.05.2014 அன்று களப்பயணமாக வேலூர் மாவட்டத்திற்கு வருகை தந்தனர். National Resource Organisation உதவித் திட்ட மேலாளர் திரு தில்லைநாயகம் அவர்கள் இக்குழுவினரை வழிநடத்தினார்.

வேலூர் மாவட்ட திட்ட மேலாளர் திரு. எஸ். நாராயணன் அவர்களின் தலைமையில் இக்குழுவினர் 23.05.2014 மற்றும் 24.05.2014 ஆகிய தேதிகளில் வேலூர் மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் சென்று புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகளை பார்வையிட்டனர்.

இக்குழுவினருக்கு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, பால் உற்பத்தியாளர்கள் பூச்சரம், சமூக தணிக்கைக் குழு, கிராம சபா, ஆளுமை மற்றும் பொறுப்புணர்வு பயிற்சி போன்றவை குறித்து விளக்கமளிக்கப்பட்டது. மேலும் ஊராட்சியில் உள்ள அனைத்து விவரங்களையும் கணினியில் பதிவு செய்வதை பார்வையிட்ட இக்குழுவினருக்கு, பிற துறைகளில் இருந்து கிடைக்கக் கூடிய உதவிகளான முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு உதவித் தொகை பெற்றுத் தருதல், இலவச வீட்டு மனைப் பட்டா, குடும்ப அட்டை, பசுமை வீடுகள், திருமண உதவித் தொகை, விலை இல்லா ஆடு மாடுகள் போன்றவை பெற்றுத் தருதல் குறித்தும், ஆரோக்கிய அட்டை (Health Card & Vision Card) பெற்றுத் தருவது குறித்தும், பிற துறைகளை ஒருங்கிணைத்து செயல்படுவது, நலத்திட்ட உதவிகளைப் பெற்றுத் தருவது குறித்தும் விளக்க மாகக் கூறப்பட்டது.

கிராம கற்றல் மையத்தைப் பார்வையிட்ட இக்குழுவினருக்கு, இம்மையத்தின் செயல்பாடு களான 10 மற்றும் 12ஆம் வகுப்பு தேர்வு முடிவுகளை அறிந்து கொள்ள உதவுவது, மின்சார கட்டணம், தொலைபேசி கட்டணம் போன்றவை செலுத்துதல், ரயில் டிக்கட் முன்பதிவு செய்தல், அரசு தேர்வுகளுக்கு இணையதளம் மூலம் விண்ணப்பித்தல், அரசு நலத் திட்ட உதவிகளைப் பெற விண்ணப்பங்களை இணையதளம் மூலம் அனுப்புதல் போன்றவை குறித்தும் விளக்கமாக எடுத்துக் கூறப்பட்டது.

வேலூர் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகளை பார்வையிட களப்பயண மாக வருகை தந்த ஜம்மு காஷ்மீர் மாநில ஊரக வாழ்வாதார இயக்க குழுவினர் தமிழகத்தில் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகள் சிறப்பாக இருப்பதாகப் பாராட்டிச் சென்றனர்.

இக்குழுவினருக்கு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, பால் உற்பத்தியாளர்கள் பூச்சரம், சமூக தணிக்கைக் குழு, கிராம சபா போன்றவை குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

Published by S.CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From TNCDW, Annai Teresa Mahalir Valagam, 1st Floor, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai – 600 034 (75,600 Copies circulated) an Printed by C. JEBAMANI, CANAAN PRESS PRIVATE LTD., No. 62/1, Peter's Road, Royapettah, Chennai - 600 014. Editor: S.CHINNAPPAN.

கழிவறை உபயோகமே, வாழ்க்கைக்கு ஆரோக்கியம்

unicef
unite for children

மலம் – வாய் வழி உள் சென்று நோய் பரவும் விதம்



கைகள் மூலம்

மலம் கழித்து
உடலை சுத்தம்
செய்த பிறகு கைகளை
முறையாக சுத்தம்
செய்யாமல்
இருந்தால்

+

ஈக்கள் மூலம்

மலத்தில் அமரும்
ஈக்கள் உணவிலும்
அமர்ந்து உணவை
மாசுபடுத்துவதால்

+

வளர்ப்பு பிராணிகள் மூலம்

வீட்டில் வளரும் கோழி,
நாய் போன்ற வளர்ப்பு
பிராணிகள் மலத்தை
சாப்பிட்டபின்
வீட்டிற்குள்
வரும்பொழுது

காய், கனிகள் மூலம்

வயல் வெளிகளை திறந்த
வெளிக் கழிப்பிடமாக
பயன்படுத்துவதால்
காய்கனிகள்
மாசுபடுவதன் மூலம்

+

குடிநீர் மூலம்

ஆறு, குளம் இவற்றின் கரைகள்
திறந்த வெளிக் கழிப்பிடங்களாய்
பயன்படுத்தப்படுவதாலும்
ஆறு மற்றும் குளத்தில் உள்ள
தண்ணீரில் மலம் கழித்தவர்கள்
உடலை சுத்தம் செய்வதாலும்

=

விளைவு

**மலம், உணவு பொருட்கள்,
குடிநீர் மற்றும் காய்கனிகள்
மூலம் வாய்வழியாக
உட்சென்று நோய்பரவ
ஏதுவாகிறது.**

தவிர்க்கும் வழிமுறைகள்

மலம் கழிக்க
கழிப்பறையையே
பயன்படுத்துதல்

கைகளை சோப்
உபயோகித்து
சுத்தம் செய்தல்



பாதுகாக்கப்பட்ட
குடிநீரை முறையாக
சேமித்து பயன்படுத்துதல்



முறையாக உணவு
சுத்தம் பேணுதல்

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS 498 / 2012
Reg. No. TN/CH(C)/455/12-14 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP - 564 / 2012 - 14
Date of Publication 22.06.2014

விவசாயக் கடனுதவி

விளை நிலம் தேடிவரும் உன்னத வங்கிச் சேவை

- புதிய அம்சங்களுடன் திருத்தியமைக்கப்பட்ட கிசான் கடன் / ஏ.டி.எம் / டெபிட் கார்டு
- விவசாய அபிவிருத்திக்காக நகை அடமானக் கடனுதவி
- கரும்பு ஆலையுடன் ஒப்பந்த அடிப்படையில் கடனுதவி
- வேளாண் பொருட்களை விற்பனை செய்வதற்கான கடனுதவி
- விவசாயப்பண்ணை இயந்திரங்கள் / நீர்ப்பாசனக் கருவிகள் வாங்கவும், விவசாய நில அபிவிருத்திக்காகவும் கடனுதவி
- விவசாயம் சார்ந்த வேளாண் மற்றும் தோட்டக்கலை அபிவிருத்திக்கு கடனுதவி
- நிலம் / எஸ்டேட் வாங்குவதற்கு கடனுதவி

மேலும் விவரங்களுக்கு: அருகில் உள்ள இந்தியன் வங்கி கிளையை தொடர்பு கொள்ளவும்.

கார்பரேட் அலுவலகம்:
254-260, அவ்வை சண்முகம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை-600 014.
மின்னஞ்சல்: indmail@indianbank.co.in
கட்டணமில்லா தொலைபேசி: 1800 425 00 000
இணையதளம்: www.indianbank.in

இந்தியன் வங்கி
इंडियन बैंक
உங்கள் தொழில்நுட்பநேய வங்கி